# கற்பகம்

முத்திங்கள் இதழ் – 2
வைகாசி 1992
விலை 12/-

பனை தென்னை வள அபிவிருத்தி ஒன்றிய வெளியீடு.

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 3150




Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மானி கோப்" வரவேற்கின்றது

எமது உள்ளூர் வளங்களைக் கொண்டு
உற்பத்தி செய்யப்பட்ட

- பனை வெல்லம், பனஞ்சீனி, கற்கண்டு
- புனாட்டு, ஜாம், சுவையூட்டு பானம்,
- ஒடியல், புழுக்கொடியல், முக்கூட்டுமா
- இனிப்பு, சிற்றுண்டி வகைகள்
- துடைப்பங்கள், தூரிகைகள்
- வீட்டுப் பாவனைப் பொருட்கள்

அத்துடன்

- *பாடசாலை உபகரணங்கள் ஆகியவற்றை*

மானிப்பாய் தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கத்தின்

## "மானி கோப்"

விற்பனை நிலையங்களில் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**மானிகோப்-வி. நிலை. I**
மானிப்பாய் மருத்துவமனை
முன்பாக

**மானிகோப்-வி. நிலை. II**
கட்டுடை, மானிப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 3150

# காப்பரண்

முத்திங்கள் இதழ்

அரண் - 1 கணை - 2
1992


ஒரு போராளியின் கால் சற்றுச் சுழுக்கி விட்டது. நொண்டி நொண்டி பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தான். அவன் மிகவும் கஸ்ரப்பட்டு பயிற்சி செய்து கொண்டிருந்ததைப் பார்த்த சக போராளி அப்படி ஏலாத வேளையிலும் என்ன பயிற்சி வேண்டிக் கிடக்கின்றது, ஏலாது விட்டால் போய்படுக்கவேண்டியது தானே? என்றான். அதற்கு போராளி, நீ ஒரு முட்டாள் என் சுழுக்குவலி தற்காலிகமானது. ஆனால் நான்பெறும்பயிற்சியால் மலரப்போகும் தமிழீழ சுதந்திரம் மகத்தானது என்றான்.

சக போராளி வாயடைத்து போனான். என்பதைச் சொல்லவும் வேண்டுமா? பலர் உழைப்புக்கும் முயற்சிக்கும் பயந்து கொண்டு தயங்கிக் கொண்டும் பல அரிய சாதனைகளையும், தியாகங்களையும் செய்யத்தவறி விடுகின்றார்கள். சிறுசிறு கஷ்டங்களையும் உடற்சிரமங்களையும் பெரிதாக எண்ணிக்கொண்டு எதையும் செய்யாமல் சோம்பேறிகளாகத்திரிவதில் பயன் ஏதும் விளையப்போவதில்லை.

ஒரு விவசாயி விதைக்கச் சிரமப்பட்டால், விளைச்சல் காணமுடியுமா? ஒரு போராளி போராடாது விட்டால் வெற்றி காணமுடியுமா? ஒரு பெண் பிரசவ வலிக்குத் தயங்கினால் அவள் தாயாக முடியுமா? தியாகங்கள், வீரங்கள், சுதந்திரங்கள் வளரவேண்டுமானால் அதற்குப்பயிற்சிகள், சிரமங்கள் துன்பங்கள் போன்றவைகளை நாம் அனைவரும் தாங்கிக் கொள்ளும் மனோபலம் அடைத்தான் வேண்டும்.

ஏனோ சிலர் உணர்கின்றார்கள் இல்லை. சிறுசிறு தடைகளுக்காக எமது தாயகத்திற்கான பணிகளை ஒத்திப்போடுவது புத்திசாலித்தனமாகாது. எமது தியாகங்களும், வீரங்களும் தரப்போகும் பலன்களை ஒரு கணமேனும் தமிழீழக் குடிமகன் ஒருவன் சிந்தித்துப் பார்ப்பானேயானால் சிரமங்கள், கஸ்டங்கள், பயிற்சிகளைத் தாங்கிக்கொள்ளும் மனோ பக்குவம் அவனுக்குத்தானாகவே வந்துவிடும். வேறு வழியில் சொல்ல வேண்மானால் நாம் சிரமத்தை எண்ணிப் பார்க்காமல் அதனால் மலரப்போகும் தமிழீழம். சுதந்திரம், புதியசமுதாயம் போன்றவையே எம்கண்முன்னால் தோன்றும். தேசமீட்புப்போரினால் ஏற்படப் போகும் காயங்களை நாம் அடையப்போகும் தமிழீழ சுதந்திரத்தால் மாற்றி விடலாம். சிறுசிறு பலதரப்பட்ட போராட்ட முயற்சிகளை நாம் ஒவ்வொருவரும் தொடங்கி விட்டால் எம் தமிழீழ எல்லையினை நாம் விரைவில் பலப்படுத்தத் தயாராகிவிடுவோம். சோதனைகள் அனைத்தும் எமக்குச் சாதனையாகவே அமையும். □

# தென்னை மரங்கட்கு பசளையிடும் முறைகள்




சிதம்பரப்பிள்ளை சிவராஜன்

ஒரு பயிரில் இருந்து உச்ச விளைவு பெறவேண்டுமாயின் காலத்துக்குக் காலம் பசளையிடுதல் வேண்டும். இயற்கைப் பசளைகள் கால தாமதமாகவே பயிரினால் கிரகிக்கப்படும். ஆனால் செயற்கைப் பசளைகள் பயிரினால் உடனடியாக உள்ளெடுக்கப்பட்டு கூடிய விரைவில் அதன் பயனைத் தரவல்லன. ஆனால் செயற்கைப் பசளைகளை ஒரே முறையில் பிரயோகிக்காமல் பிரித்து இரண்டு மூன்று முறையாகப் பயன்படுத்துதல் உச்ச விளைவைத் தருவது அவதானிக்கப்பட்டுள்ளது. செயற்கைப் பசளைகளைப் பயன்படுத்தும் போது பயிரின்வயது பசளையிடும் முறை, பசளையின் அளவு, பசளையின் போசனைத் தன்மை என்பன கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். வெவ்வேறு வகையான வயதுடைய தென்னைகட்கு வித்தியாசமான பயிர் போசனைகள் (பசளை) சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

தென்னை ஆராட்சி நிலையத்தினால் சிபார்சு செய்யப்பட்ட (சி. ஆர். ஐ. கலவை) இயற்கைப் பசளைகள் உகந்தவை.

தென்னை மரங்கட்கு இடையே மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் மரங்களின்

> உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை,
> உரம் உதவுவதுபோல் ஊரார் உதவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மையில்மண்ணின்மேற்பகுதியில் செயற்கை பசளை களைவீசிவிட்டு, கிளறி மண்ணுடன் சேர்த்து விடுவதால் கூடிய அளவு விளைவு கிடைந்துள்ளது. மரத்துக்கு அண்மையில் மேல் மண்ணில் பசளை இடுவதால் நன்கு கிரகிக்கக் கூடிய வலுவுடைய வேர்கள் இவற்றை உட்கொள்கின்றன. என அறியப்பட்டுள்ளது

பொதுவான அவதானப்படி தென்னை மரங்களின் மேற்பக்கத்தில் நிலமட்டத்துடன் உள்ள வேர்களே கிரகிக்கும் தன்மை கூடியவை.

பசளையிடும் முறை:-

வெட்டப்படும் கான்கள் மூன்று அடி அகலமாகவும் 3 அங்- 6அங் ஆழம் உடையதாகவும் இருத்தல் வேண்டும்.

தற்போதைய சூழ்நிலையில் செயற்கைப்பசளைகளை நம்பியிராது இயற்கைப் பசளைகளைக் கூடிய அளவு நாடவேண்டியுள்ளது.; மழைக்காலங்களில் தென்னை மரங்களின் அடியில் இருந்து 3 (அடி) தூரத்தில் 2 (அடி) அகலமான 6 அங்குல ஆழமான கான்களை வெட்டி அதில் குப்பை, கூட்டெரு, மாட்டெரு போன்றவற்றை இட்டு மூடிவிடலாம்.

அல்லது அந்த மரங்களைச் சுற்றி வெட்டிய பின் ஆடு, மாடுகளை ஒவ்வொரு மரத்தடியிலும் இரண்டு வாரங்கட்கு கட்டி விடுவதால் கால் நடைகளின் சிறுநீர், எரு என்பன பயிருக்கு உகந்தவையாகக் காணப்படுகின்றன. அத்துடன் மழைநீரும் தேங்கி நிற்பது நன்று. இச்செயல் முறையினால் அந்த ஆண்டு விளைவு கூடக்கிடைக்காவிட்டாலும் அடுத்த ஆண்டுகளில் கூடிய விளைவைப் பெறலாம்.

காய்க்கும் மரங்கட்கு பொட்டாசு போசனை அதிகம் தேவைப்படுவதால் இக்காலங்களில் சமையல் அறையில் கிடைக்கும் சாம்பல் பயன்படுத்தப்படலாம். செயற்கைப் பசளைகளைப் பெறும் கஸ்டமான சூழ்நிலையில் இயற்கைப் பசளைகளை நாடலே உகந்தது.

கவனிப்பாரற்றுக்காணப்படும் தென்னை மரங்கள் நாளடைவில் குறைவான விளைவையும் பயனையும் தருவதுடன் காய்களின் பருமன், அளவு, எண்ணிக்கை என்பன குறைந்து விடும்

தெங்குப் பயிர்ச் செய்கையில் பசளைப் பிரயோகம் மிகவும் முக்கியமானது ஆகும்.

## பனஞ்சீனிக் கழிவுப்பாகின் பயன்கள்.

சத்துள்ள கூழ்ப் பதனீரில் இருந்து வெண்மையான சீனி எடுத்தபிறகு, எல்ல ஊட்டச்சத்துக்களும் கழிவுப் பாகிலே சேர்ந்து விடுகின்றன. இயந்திரத்தில் நெல்லை அரைத்துப் பளபளப்பாக்கும் போது அரிசியில் உள்ள உணவுச் சத்துக்கள் தவிட்டுடன் போய் விடுவது போல பதனீரிலுள்ள ஊட்டச்சத்தும், சீனி தயாரிக்கும் பொழுது கழிவுப்பாகுடன் கலந்து கொள்கின்றன.

இக்கழிவுப் பாகினை கீழ்வரும் சில வழிகளில் பயன்படுத்தலாம். மண்கலவை தயாரிப்பின் போது களிமண், ஆற்றுமணல், இரண்டையும் தேவைக்கு ஏற்றபடி கலந்து தண்ணீர் சேர்ப்பதற்கு முன்னர், கலவையின் நிறையின் மூன்றில் இருந்து ஐந்துசதவீதம் இக்கழிவுப்பாகைக் கலந்து சாந்தாகச் செய்து செங்கற் கட்டிடங்கள் கட்டலாம். நனையாத சுவர்களின் சீமெந்துக்குப் பதிலாக இதைப் பூசினால் அதிகபலமாகவும், உறுதியாகவும் இருக்கும். இந்தக் கலவையில் ஒருசதவீதம் சாம்பலையும் சேர்த்துக் கொண்டால் சுவருக்கு இன்னும் அதிகவலுவைக் கொடுக்கும். மற்றும் கால்நடைத் தீனாக தவிடு, உலர்ந்தபுல் இவைகளுடன் கழிவுப்பாகைக் கலந்து மாட்டுத்தீவனமாக உபயோகிக்கலாம். இதனால் ஓரளவுக்கு பால் அதிகரிக்கும் அத்துடன் பாரவண்டி இழுக்கும் மாடுகளுக்கு கிராமமக்கள் பனைவெல்லத்தை தவிட்டுடன் கலந்து கொடுக்கின்றனர்.

கழிவுப்பாகினை மேற்கூறப்பட்ட வழிகளில் 'பயன்படுத்துவதன் மூலம் கழிவுப்பாகின் பயனை அதிகரிக்கலாம்.

கழிவுப்பாகு நொதிக்க வைக்கும் போது, அற்க கோலாக (மதுசாரமாக) மாறுவதனால், சாராய உற்பத்திக்கு பெருமளவு பயன்படுத்தப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காப்பரண் 4

எமது மண்ணின் பேணலில் கடந்த ஆண்டின் ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் யாழ் குடாநாட்டுப் பாடசாலை மாணவ மாணவிகள் பனம் விதை பனம் நாற்று நடுகையில் காட்டிய ஆர்வம் செயற்பாடுகள் பல வழிகளிலும் முன்மாதிரியாக இருந்தன.

**வலிகாமம்**

மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப் பாடசாலை மாணவ மாணவிகள் மானிப்பாய் தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கத்தின் உதவியுடனும், வளர்மதி சனசமுக நிலைய உதவியுடனும் 6000 பனம் விதைகளை தமது பாடசாலைச் சூழலில் நடுகை செய்தனர்.

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, மருதனாமடம், இராமநாதன் கல்லூரி, மாணவிகளும் பனை நடுகையில் தமது கூடிய பங்களிப்பைக் காட்டினார்கள். சங்கானை சிவப்பிரகாச வித்தியாலையம், வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி மாணவ மாணவிகளும் மாவீரர் வாரத்தில் தமது பாடசாலைச் சுற்றாடலில் பனம் விதைநடுகையை மேற்கொண்டனர். கந்தரோடை ஸ்கந்தவரோதையாக் கல்லூரி மாணவ மாணவிகளும் மாவீரர் வாரத்தில் பனை நடுகையை மேற்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

**யாழ்ப்பாண நகரில்**

நகரிலுள்ள பல கல்லூரிகளில் பெருந்தொகை மாணவர்கள் கற்றுவருவது தெரிந்ததே, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மாணவர்கள் தனித்து தமது பாடசாலை வளவினுள் பனம் நாற்றுக்களை பனை தென்னை வள அபிவிருத்தி ஒன்றியத்தினூடர்கப் பெற்று நாட்டியமை தனித்துவம் பெறுகின்றது.

மாணவர்களின் இந்த முன்மாதிரி நடவடிக்கைகள் மூலம் நடுகை செய்யப்பட்டுள்ள பனம் நாற்றுக்களையும் பனம் விதைகளையும் பேணிப்பாதுகாப்பதில் பொது மக்களின் ஒத்துழைப்பை மேற்படி மாணவர்கள் கோரி நிற்பது இங்கு வலியுறுத்தத்தக்கதாகும்.

**☐ மாணவர் பங்களிப்பு**

☐ எஸ். இருஷ்ணா

காப்பரண்
தரும்
ஜேர்மன் கதை

"ஒரு நாட்டின் சுதந்திரத்தை மீட்டெடுக்க படைப்பலமோ, ஆட்பலமோ, பெரிதல்ல அதைவிட நாட்டுப்பற்றும். கொண்ட கொள்கையின் மனஉறுதியுமே பெரிது என்பதற்கு ஜேர்மனியில் நடைபெற்ற பின்வரும் உண்மைக் கதையான ஸ்டாப் என்னும் மாவீரனின் கதை ஒரு உதாரணமாகும்"

# நாட்டுப்பற்று

தமிழில்: ஈழத்தீபன்

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதி, ஜேர்மனியை நாலாபுறமும் தாக்கி நாசப் படுத்திக் கொண்டிருந்த நேரம் எங்கு பார்த்தாலும் இரத்தவெள்ளம், ஜேர்மனியை படாதபாடு படுத்தி உலக சர்வாதிகாரியாக வேண்டுமென்ற பேராசை கொண்டான் நெப்போலியன். தன் வீரர்களையெல்லாம் சர்வாதிகார வெறியர்களாக்கி விட்டான். அவன் விளைவு அட்டூழியங்கள் அளவுக்கு மிஞ்சிவிட்டன.

ஸ்டப்ஸ் ( *STUPPS* ) என்பவன் ஒரு ஜேர்மானிய க் குடியானவன். தன் மானமும், நாட்டுப்பற்றும் நிறைந்த நல்ல இளைஞன் அவனுக்கு நெப்போலியன் செய்கை பிடிக்கவில்லை. தன் நாட்டைச் சுடுகாடு ஆக்கி மக்களைக் கொன்று பிணமாக்கும் வெறியன் நெப்போலியனை எப்படியும் கொன்றுவிட வேண்டுமென்று அவன் முடிவு செய்தான் உடனே கூரிய வாளை எடுத்துக் கொண்டு போர்க் களம் விரைந்தான்.

அன்று அமாவாசை இருட்டு எங்கும் ஒரே இருள். பகலில் போர் நடந்ததற்கு அறிகுறியாகப் போர்க்களமெங்கும் பிணங்கள் குவிந்து கிடந்தன. முறிந்து போன ஆயுதங்கள் கணக்கில்லாமல் கிடந்தன. இரத்தக் கட்டி எங்கும் உறைந்து கிடந்தது. நரிகளும், ஓநாய்களும் செத்த பிணங்களை ருசி பார்த்துக் கொண்டிருந்தன. நரி ஓநாய் இவற்றின் ஊளைகளோடு ஆந்தைகள் அலறலும் சேர்ந்து கொண்டது அந்த யுத்த களம் ஒரு பயங்கரப் பிரதேசமாகவே காட்சி அளித்தது.

அப்பிரதேசத்துக்குள்ளே நுழைய எவனுமே அஞ்சுவான், ஆனால் ஸ்டப்ஸ் நெப்போலியனின் பாசறையை நோக்கி மின் வேகத்தில் விரைந்தான்

---

**ஒரு பட்ட மரத்தை வெட்டும் போது,**
**பத்து மரங்களை நடுவோம் நாமே.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம் அவன், தன் உடலை வெறுத்து, உயிரை வெறுத்து, உலகை வெறுத்துச் சென்று கொண்டிருந்தான். தன் தாய் நாட்டை நாசப்படுத்திய நாசகாரன் நெப்போலியனைக் கொல்லப் போகும் போது போர்க்களத்தில் தலைவேறு கைவேறு, கால் வேறாக மாண்டு கிடக்கும் தன் அருமைத் தாய் நாட்டு வீரர்களைப் பார்த்துப் பார்த்து அவன் கண்ணீர் விட்டான்.

ஸ்டப்ஸ் பதுங்கிப் பதுங்கிச்சென்றான், கூடாரங்களைக் காவல் புரியும் பிரெஞ்சு வீரர்கள் கண்களில் படாமல் மறைந்து மறைந்து சென்றான். அதோ பிரெஞ்சு மன்னன் சர்வாதிகாரி நெப்போலியனின் கூடாரம். விநோதமாக அலங்கரிக்கப் பட்டு வெகு அற்புதமாயிருந்தது. அந்தக் கூடாரம் பிரெஞ்சு சர்வாதிகாரி நெப் போலியன் துயில்கிறான் என்று பெருமைப் பட்டுக் கொண்டிருந்தது. ஸ்டப்பின் மனம், அந்தக் கூடாரத்தின் வாயிலில் நின்ற காவலாளியோ அரைத்தூக்கத்திலிருந்தான்.

துர்ரதிஸ்டம்! இதுவரை அரைத் தூக்கத்திலிருந்த காவலாளி திடீரென்று விழித்து விட்டான். அவன் ஸ்டப்ஸ் நெப்போலியனைக் கொல்ல முயலும் காட்சியைக் கண்டான்.

உடனே அவன் ஸ்டப்பின் மேல் பாய்ந்து கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். கூச்சலிட்டான்! உடனே நெப்போலியன் திடுக்கிட்டு எழுந்தான். மற்றக் கூடாரங்களிலிருந்த வீரர்களும் விரைந்தோடி வந்தனர்.

பிரெஞ்சு மன்னன் சர்வாதிகாரி நெப்போலியனைக் கொலை செய்ய முயன்ற ஸ்டப்ஸ் பிரெஞ்சு நாட்டுக்குக் கொண்டு செல்லப்பட்டு சிறையில் வைக்கப்பட்டான்.

இருவருடம் மறைந்தன. பாவம்! ஸ்டப்ஸ் இந்த இரண்டு வருடமாகப் பிரெஞ்சுச் சிறையில் கிடந்து பல இன்னல்களுக்கு மத்தியில் வாடினான். அவன் ஆசை நிராசையாகி அவனும் சிறையில் சிக்க வேண்டியதாகி விட்டது. சரியாகச் சாப்பிட்டு எத்தனையோ, நாட்கள் ஆகின்றன. சரியாக உறங்கி எத்தனையோ நாட்கள் ஆகின்றன அவனுக்கு எப்போதும் தன் அருமைத்தாய் நாடான ஜேர்மனியைப் பற்றியும் தன் நாட்டு மக்களின் சுதந்திரம் பற்றியுமே கனவு.

நெப்போலியனை கொலை செய்ய முயன்ற போது அணிந்திருந்தானே, அதே ஆடையைத்தான் இன்றும் அணிந்திருந்தான்.

அந்த ஆடை இப்பொழுது சிழிந்து கந்தலாகி விட்டது ஆம், ஸ்டப்ஸ் அந்த ஆடையை அணிந்து அரை நிர்வாணமாயிருந்தான்.

ஒரு சிறை அதிகாரி அரை நிர்வாணமாக இருந்த ஸ்டப்ஸைக் கண்டு இரக்கங் கொண்டார். உடனே புதிய ஆடை ஒன்றைக் கொண்டு வந்து கொடுத்தார்.

ஸ்டப்ஸ் இந்த ஆடைகளைக் கையிலே வாங்கினான். பைத்தியம் பிடித்தவன் போல் உற்று உற்றுப் பார்த்தான்! கூர்ந்து கூர்ந்து பார்த்தான்! புரட்டிப் புரட்டிப் பார்த்தான்.

பிறகு, அந்த அதிகாரியை நோக்கி 'ஐயா, இந்த ஆடை எங்கு நெய்யப்பட்டது?' என்று கேட்டான்.

''பெரும், புகழும் மிக்க நாடாகிய எங்கள் பிரான்சில் நெய்யப்பட்டது. உலகாதிபதியாகி விடவேண்டும் என்ற ஆசையுடனும், விடா முயற்சியுடனும், போர் புரியும் மாவீரர் நெப்போலியனை மன்னனாகக் கொண்ட இந்தப் பிரான்சில் தான் இது நெய்யப்பட்டது'' என்று பெருமையாகக் கூறினார் அந்த அதிகாரி.

அவ்வளவு தான்! ஸ்டாப்ஸ் அடைந்த கோபத் திற்கு எல்லையே இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆ! என் நாட்டை நாசப்படுத்திய நாசகாரர்கள் கையால் நெய்யப்பட்ட ஆடையா இது! என் நாட்டு மக்களைக் கொன்று குவித்த கொலைக்காரர்களால் நெய்யப்பட்ட ஆடையா இது! இது எனக்கு வேண்டவே வேண்டாம். நான் அணிந்திருக்கும் ஜேர்மன் நாட்டுத் துணி- கந்தல் கந்தலாயிருக்கும் இந்தத் துணி- முழுதும் பாழாகி நான் நிர்வாணமாகினாலும் சரி, இந்தப் பிரெஞ்சுப் பிசாசுகளால் நெய்யப்பட்ட ஆடையை அணியவே மாட்டேன்!" என்று வீரகர்ஜனை புரிந்தான். உடனே, பிரெஞ்சு ஆடையை அந்த அதிகாரியிடமே வீசி எறிந்து விட்டான்.

அந்த அதிகாரி, ஸ்டப்ஸ் தம்முடைய நாட்டை அவமதிப்பதைக் கண்டார்! உடனே அளவில்லாத கோபங் கொண்டார். சென்றார் விரைவாக, மன்னன் நெப்போலியனிடம் சொன்னார். ஸ்டப்ஸ் பிரெஞ்சு நாட்டை அவமதித்த விஷயத்தை.

இது கேட்ட மன்னன் நெப்போலியன் சீறினான்! ஆ! அந்த அற்ப ஜேர்மன்காரனுக்கு எவ்வளவு துணிச்சல்! என் பொன்னான நாட்டையா அவன் அவமதித்தான்? என்னுடைய நாட்டிலே நெய்யப்பட்ட நல்ல உயர்ந்த ஆடையையா அவமதித்தான்? ஆ! அவனுக்கு அவ்வளவு திமிரா? இப்போதே அவன் திமிரை அடக்க வேண்டும். என் நாட்டை இகழ்ந்து பேசிய அவனை நாளைக்காலை தூக்கிலிட வேண்டும் ஆம், என் கண்ணான, பொன்நாட்டைத் தூசித்த அந்த அற்பனுக்குத் தூக்குத் தண்டனையே சரியான தண்டனை! எனக் கட்டளை இட்டான்.

மறுநாள் காலை தூக்குமேடையில் கொண்டு வந்து நிறுத்தப் பட்டான், அஞ்சா நெஞ்சன் தாய்நாட்டுப்பற்று நிறைந்த சுத்த வீரன் ஸ்டப்ஸ்.

தன் தலைக்கு உயரே தொங்கும் சுருக்குக் கயிற்றைக் கண்டான். தூக்குமேடைக்கு எதிரே வீற்றிருக்கும் மன்னனைக் கண்டான். அவனுடைய பரிவாரங்களைக் கண்டான். அவர்களைப் பார்த்து தன் நாட்டுப் பற்றை மனதில் நிறைத்து ஓர் ஏளனப் புன்னகை புரிந்தான்.

டாங் ... டாங் என ஆயத்தமணி ஓசை கேட்டது. தூக்கில் தொங்க வேண்டிய நேரம் நெருங்கி விட்டதென்பதையே அந்த மணியோசை அறிவித்தது.

"ஏய் கைதியே உன் கடைசி ஆசை என்ன? கூறு" என்று கம்பீரமாகக் கேட்டான் நெப்போலியன்.

"என் கடைசி ஆசை இதுதான் தூக்குத் தண்டனை நிறைவேறிப பின் என் சடலத்தை என்னுடைய தாய்நாட்டு ஜேர்மனி துணியால் போர்த்தி அடக்கம் செய்ய வேண்டும் இதுவே என் கடைசி ஆசை" என்று கம்பீரமாகக் கூறினான், ஸ்டப்ஸ்.

அவன் முகம் கறுப்புத் துணியால் மூடப் பட்டது. அவன் கழுத்தில் சுருக்குக் கயிறு இறுக்கப் பட்டது. மாவீரன் ஸ்டப்ஸின் சடலம் அந்தரத்தில் தொங்கியது.

அப்பொழுது தான் அந்தமாவீரன் தன் தாய் நாட்டைப் பற்றியும் அதன் ஒவ்வொரு அங்கத்தின் மேலும் அவன் வைத்திருக்கும் பற்று பாசம் போன்றவற்றின் உணர்ச்சி வசமாகப் பேசிய பேச்சின் தொனிகளும் நெப்போலியனின் மனதில் திரைப்படம் போல ஓடத் தொடங்கியது.

ஆம் இவ்விளைஞனுக்கு இந்த வயதில் எவ்வளவு தேசபக்தி இது எவ்விதம் வந்தது? எப்படி இந்தப் பிரெஞ்சு உலகத்தால் மரணமே வந்தாலும் கொண்ட கொள்கையை இறுதி மூச்சு உள்ள வரை தாக்குப் பிடித்திருந்த இவனல்லோ மாவீரன் இப்படித் தாயை விட தாய் நாட்டை நேசிக்கும் வாலிபர்கள் வீட்டுக்கு ஒருவர் இருந்தாலும் போதுமே நாட்டைச் சிறைமீட்க என மறைந்த மாவீரன் ஸ்டாப்பை எண்ணிக் கண்ணீர் விட்டான்.

பின் ஸ்டாப்பின் விருப்படியே அவன் சடலத்தை அவன் தாய்நாட்டு ஜேர்மன் துணியால் சுற்றி அடக்கம் செய்ததோடு அந்தத் தேசபக்தன் கல்லறையில் மாவீரன் ஸ்டப்ப் என்றும் ஜேர்மன் மொழியில் பொறிப்பித்தான். ☐

# நாம் அணிவகுத்துள்ளோம்

தமிழீழத் தேசியத் தலைவர்
வே. பிரபாகரன்

நாம் அணி வகுத்துள்ளோம்.........
நாம் தமிழ் ஈழப்படைவீரர்கள்!

நாம் அணிவகுத்துள்ளோம்
இழந்த நாட்டை மீட்க!

எதிரி எமது நாட்டை
வஞ்சகமாக அபகரித்து விட்டான்

அதைக்கண்டு நாம் அஞ்சவில்லை.
புயலெனச்சீறி
இழந்த நாட்டை மீட்க

நாம் அணி வகுத்துள்ளோம்.........
நாம் ஈழப்படை வீரர்கள்!

எமது படையணி கடக்க வேண்டியது
நெருப்பாறென்பது எமக்குத் தெரியும்!
ஆனால்.........

அதைத் தாங்கக்கூடிய
மக்கள் ஆதர வென்னும்
கவசம் எம்மிடம் உண்டு!

எதிரியின் ஆயுதமோ பலம் பொருந்தியது!
எமது
ஆத்மபலமோ அதை விடவலிமை வாய்ந்தது!
எதிரியின் குண்டுகள் வெடிக்கும்.........
ஆனால்.........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

1981-ஆம் ஆண்டில் தலைவர்
வே. பிரபாகரனால் எழுதப்பட்ட இக்கவிதை
'தமிழீழம்' சஞ்சிகையில் வெளியானது

எமது விடுதலை நெஞ்சங்கள்
எரிமலை யென வெடிக்கும் சத்தத்தில்
அதன் சத்தம் அமுங்கி விடும்!

நாம் அணி வகுத்துள்ளோம் ..... ...
நாம் தமிழ் ஈழப்படை வீரர்கள்!

எமது அணிவகுப்பு
எமது தமிழ் ஈழ மக்களிடையே
அணி வகுத்துச் செல்கிறது!

நாம் செல்லும் இடமெல்லாம் .........
எமது எதிரிகள் அஞ்சி ஓடுகிறார்கள்.

மக்களிடம் உள்ள
பிரதேசம் சாதி
மதமெனும் பேய்களும்
அலறி ஓடுகின்றன.........

எமதுபடை அணி விரைகிறது.........
எமது தேசத்தை மீட்க!

நாம் செல்லும் இடமெலாம்
காடுகள் களனிகள் ஆகின்றன.
வெட்டிப் பேச்சுப்பேசுபவர்கள்
மிரண்டோடுகின்றனர்.........!

உழைப்போர் முகங்களில்
உவகை தெரிகிறது

ஏழைகள் முகங்களில்
புன்னகை உதயமாகின்றது □□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழத்தின் இராசபயிர்கள்

Appropriate Technology Services
121, POINT PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

வி. கவிதா

பனையும் தென்னையும் நிறைந்த வளநாடு நம் தமிழீழம். இயற்கை நமக்குத் தந்த வளங்கள் பல. அவற்றுள் பனை முதன்மை பெறுகின்றது. பனை தென்னையிலிருந்து பெறும் உணவுகளில் ஊட்டச் சத்துக்கள் உண்டா? என நாம் சந்தேகிக்கின்றோம். தேங்காயிலுள்ள கொழுப்பு நமது பா[illegible]னையிலுள்ள வெண்ணையிலும் அதிக ஊட்டச்சத்து நிறைந்தது. பனப்பழத்தில் நிறைந்த ஊட்டச்சத்துக்களும், அதிகளவு உயிர்ச்சத்து 'சீ' உள்ளதாக ஆய்வாளர் கண்டுள்ளனர்.

நமது முதியோர் பலர் வயது பல கடந்தும் இன்னும் உயிரோடு திடமாக வாழ்வதன் இரகசியத்தை அவர்களிடம் வினவிய போது; ''வெளிநாட்டு உணவுப் பொருட்களை அள்ளிக்கொட்டி வயிற்றுக் கோளாறால் அவதியுறவில்லை. மாறாக எம் மண்ணில் இயற்கையாகக் கிடைக்கும் பனையின் நுங்கு, பனம்பழம், ஒடியற்பிட்டு ஒடியற் கூழ், பனாட்டு வகைகளை உணவாக உண்டு, மருந்துகளை நாடாது வாழ்கின்றோம்'' எனக் கூறிப் பெருமை கொள்கின்றனர்.

எமது மக்களின் அயரா உழைப்பும் நிறைவான இயற்கை வளங்களும் அந்நிய ஆள்வோரின் உணவு இறக்குமதிகளால் மறைக்கப்பட்டன. எறும்பு போன்ற நம்மவரிடையே சோம்பல் குடிகொண்டது. இயற்கை வளங்கள் கைவிடப்பட்டன. ஆழ் கிணற்றிலிருந்து நீரை வெளிக் கொணர்ந்து பயிரிடலில் துலா உருவில் முக்கிய இடம் வகித்த பனை தென்னைகள் கூட அருகி இயந்திரங்கள் தோன்றின. எம் முன்னோர் செய்த பயனால் ஓரளவு பனை, தென்னை இன்னும் காணக் கூடியதாக உள்ளன.

குறிப்பாக இன்றைய காலகட்டத்தில் பாதுகாப்புக்கும், உணவுக்கும், தொழில் உற்பத்தியிலும் முக்கிய பங்கு வகிப்பது பனையும் தென்னையுமே. அன்றைய எமது பொருளாதாரத்தைச் சிதைத்து பொருள் இறக்குமதியைச் செய்த அந்நியரும் இன்று எம் இனத்தை. இறைமையை அழிக்கப் பொருளாதாரத் தடைகளை ஏற்படுத்தியுள்ள அன்னியரும் எம்மை அடிமைகளாக்கி விடலாமெனக் கனவு கண்டனர். எம் மண்ணின் வளம் எங்களைக் கைவிடவில்லை. சமயத்தில் கைதந்தது. அன்று

**நாட்டில் வளமின்றிப் போனால்**
**நம் இனமின்றிப் போகும்'**

மறைந்த துவாக்கள் மீண்டும் இன்று தோன்ற ஆரம்பித்திருக்கின்றன. பாதுகாப்புப் பதுங்குகுழிகளை அமைப்பதிலும் பனை தென்னைகளே கைகொடுத்து உதவுகின்றன. எம்மவரில் பலர் இன்றைய விடுதலைப் போர்க் காலகட்டத்தில் இந்த மண்ணில் வாழ முடியாது எனக் கூறி சுயகௌரவத்தை விட்டு 'அகதி'கள் எனக்கூறி வெளிநாடுகளில் அடிமை வாழ்வு வாழுகின்றனர். எம் வாழ்வும், தாழ்வும் இந்த மண்ணிற்தான் என உரிமை கேட்டு வாழும் மக்களாகத் தாயக மண்ணில் வாழ்பவர்கள் எதை நம்பி இங்கு தங்கினார்கள்? எம் இயற்கை வளக்களை நம்பித்தான் இன்னும் இந்த மண்ணிலே வாழ்கிறார்கள்.

பனம்பழம் வயிற்றோட்டத்தை உண்டாக்கும் தேங்காய் எமது உடல் நிறையை அதிகரிக்கும். ஆகவே பாணும் பட்டரும் சாப்பிடுவோம் என அந்நிய பாணியிலே வாழுகின்ற எம்மவருக்கு ஏற்ற வகையில் பனம்பாணி, பனம்பாகு, பனசீனி, பனம் பிஸ்கட்டுகள், தென்னம் பிஸ்கட்டுகள் போன்றவைத் தந்து, அவர்களின் தேவையையும் நிறைவு செய்து நிமிர்ந்து நிற்கின்றன பனைகளும், தென்னைகளும்.

பனைதானே, தென்னைதானே என்று உதாசீனம் செய்யும் வகையில் நாம் இந்த இயற்கை வளங்களை அழித்து வருவது நாமே நமக்குச் செய்யும் துரோகமாகும். அண்மைக் காலங்களில் எங்கள் ஊர்ச் சந்தையிலே பனம்பழம் அதிக விலை போனதை நாம் கண்ணாரக் கண்டோம். இதிலிருந்து நாம் அறிவது பனம்பழத்தை நுகர்வோரின் எண்ணிக்கை அதிகரித்து விட்டமையேயாகும். இன்று பனம்பழம் சலவை கூடச் செய்கின்றது.

இராணுவ நெருக்கடிகளாலும், வீடு கட்டுவோராலும் வகை, தொகையின்றி ஆயிரம் ஆயிரம் பனைகள், தென்னைகள் அழிக்கப்பட்டுள்ளன. இழப்பை ஈடுசெய்ய நாம் சில நூறு தென்னை, பனைகளையாவது உருவாக்க வேண்டும். அப்படி நாம் செய்யாவிடில் நாளைய சந்ததிக்கு நாம் என்ன பதில் சொல்லப் போகிறோம்? நம் செயல் எம் மண்ணை நாமே அவமானப் படுத்துவது போல் இல்லையா?

ஆங்கிலேயர் அன்று யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றக் கடற்கரையிலே இறங்கிய போது அங்கு தறிக்கப்பட்டிருந்த பனை, தென்னைக் குற்றிகளைப் பீரங்கி என அஞ்சிப் பின்வாங்கினார்களாம் என்று நம் முதியோர் பெருமையாகவும் நகைச் சுவையாகவும் கூறுவார்கள். உருவாக்கும் சமுதாயத்தை உருவாக்கும் தூண்கள் இன்றுள்ள பனையும், தென்னையுமே.

மாணவர்களாகிய நாம் பொறுப்புணர்வோடு நடந்து எமது மண்ணிலிருந்து சரியும் ஒவ்வொரு பனை, தென்னையையும் ஈடுசெய்யும் வகையில் பனை, தென்னைகளை நாட்டி எம்மண்ணுக்கு சிறப்பையும் பெருமையையும் சேர்ப்போமாக.

---

*நாம் பிறந்த நாள் தொட்டுக்கும் இறக்கும் வரை எமக்கு 800 வகைகளில் பனை பயன் தருகின்றது என்று பெர்கூசன் என்பார் குறிப்பிட்டுள்ளார்.*

நன்றி: தாலவிலாசம் முன்னுரை

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த நூற்றாண்டில் பனையின் முக்கியத்துவம்

எஸ். கே. மூர்த்தி

இன்று ஏற்பட்டுள்ள சமூக, பொருளாதார, அரசியல் நெருக்கடிகளினால் நாம் நமது பாரம்பரிய மூலவளங்கள் மீது கவனம் செலுத்த வேண்டியமை தவிர்க்க முடியாத காலத்தில் தேவையாகவுள்ளது. இந்த வகையில் பனையின் சமூக முக்கியத்துவம் விசேடமாக இன்று உணரப்பட்டுள்ளது. இச்சந்தர்ப்பத்தில் இந்த வளம் கடந்த நூற்றாண்டில் தமிழ் மக்களின் குறிப்பாக வடபகுதி மக்களின் நாளாந்த வாழ்வில் பெற்றிருந்த முக்கியத்துவத்தையும், அதன்பிற பொருளாதார நடவடிக்கைகள் பற்றியும் அறிவது மிகவும் பயனுடையதாகும்.

19ம் நூற்றாண்டு 70, 80களில் யாழ்ப்பாண அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய பி. ஏ. டைக் மற்றும் டபிள்யூ சி. ரைனம் அகியோர் அக்கால மக்கள் வாழ்வில் பனை கொண்டிருந்த முக்கியத்துவம் பற்றி நன்கறிந்திருந்ததோடு பனக் குடிசைக் கைத்தொழிலும் அக்கறை கொண்டிருந்தமை பற்றி பல குறிப்புக்கள் காணப்படுகின்றன. 1883ல் டபிள்யூ. ஏ. ரைனம் அவர்கள் தீவுப்பகுதி மணியகாரரிடமிருந்து இதுபற்றிய அறிக்கை ஒன்றைக் கோரியிருந்தார். கிடைக்கப்பெற்ற அறிக்கை இவ்வாறிருந்தது.

''ஒக்ரோபர் 1883 26/179ம் கட்டளை தொடர்பாக, எனது பகுதியில் இவ்வாண்டு பனம் உற்பத்திகள் திருப்திகரமானதாகவும் கடந்த வருடங்களுடன் ஒப்பிடும்போது மேம்பட்டதாகவும் உள்ளதென்பது பற்றிய எனது அறிக்கையை பணிவுடன் சமர்ப்பித்துக் கொள்ளுகிறேன்.

''இவ்வாண்டு கிடைக்கக் கூடிய பனம் பழங்கள் கனி நிறைந்தனவாகவும், தரத்தில் சிறந்தவையாகவும் இருந்தன. பழங்கள் சேகரிக்கின்ற போதுள்ள காலநிலை வரட்சியானதாகவும், சாதகமானதாகவும் இருந்ததால் பனாட்டு மிகத் தரமானதாய் தயாரிக்கப்பட்டு சேதாரங்களின்றி சேகரிக்கப்பட்டன.

பனை உள்ள நாட்டில்
பஞ்சமே இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தீவுப்பகுதிகளில் பனம்பழம் சேர்க்கும் காலம் பெரும் பாலும் ஓகஸ்டிலேயே வரும். சிலவேளை இது செப்ரெம்பர் வரை நீடிப்ப துண்டு. ஆனால் இவ்வாண்டு மூன்றிலொரு பனம்பழங்கள் நவம்பர் மாதத்திலேயே சேகரிக்க முடியும்.

''வரட்சிப்பருவம் ஆரம்பித்ததும், பொருட்கள் தட்டுப்பாடு தீவு களில் நிலவத் தொடங்கியதும், இங்குள்ள மக்கள் பெரும்பாலும் புங்குடுதீவு, எழுவைதீவு, நயினாதீவு ஆகிய இடங்களில் வசிப்பவர் கள் தங்கள் சொந்த இடத்தைத் துறந்து, வாழ்வைத்தேடி பிரதான நிலப்பகுதிக்கு இடம்பெயர நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். ஆனால் இவ் வாண்டு கிடைத்த மிகையான பனம்பழ உற்பத்தியால் இம்மக்கள் இவ்வாண்டு அவ்வாறு இடம்பெயரவில்லை. அத்தோடு ஏலவே இடம் பெயர்ந்தவர்களும் தமது சொந்த வாழ்விடங்களுக்குத் திரும்பியுள் ளனர்.

''பெரும்பாலான தீவுப்பகுதி மக்கள் முக்கிய உணவுப் பொருட்கள் பெறக்கூடியதாக பனையை எதிர்பார்த்திருந்த அதேவேளை பனை உற்பத்தி வீழ்ச்சி அடைந்ததால் அது தமக்கேற்பட்ட துர்ரதிஸ்ட மாகக் கருதினர்''

ஏறக்குறைய 100 ஆண்டுகளுக்கு முன்பு பனை தீவுப் பகுதி மக் களின் வாழ்க்கையில் எவ்வளவு முக்கியத்துவம் பெற்றிருந்தது என் பதை இவ்வறிக்கைக் குறிப்புக்கள் மிகவும் துல்லியமாக விளங்கிக் காட்டுகின்றன. இந்த நிலையையே பெரும்பாலும் பிற வடபகுதிப் பிரதேசங்களிலும் இருந்திருக்கும்.

திரு. ரைனம் தாம் பெற்றுக் கொண்ட மேற்படி அறிக்கை தொடர்பாக இவ்வாறு தனது கருத்தைத் தெரிவித்துள்ளார்.

''என்னால் பெற்றுக் கொள்ளப்பட்ட அறிக்கையில் இருந்த பனை வெல்ல உற்பத்தியானது ஏழை மக்களின் முக்கிய தொழிலாக இருப் பது தெரிகின்றது. சீட்டிஸ்யூர் ரூபா 4 இருந்து 6ரூபா வரை வேறு படுகின்ற விலையில் ரூபா 7000/- பெறுமதியாக 15,000 இறாத்தல் உற்பத்தி செய்யப்பட்டிருந்ததாக கணக்கிடப்பட்டிருக்கிறது. இவை சுத்திகரிக்கப்பட்டு படிகச் சீனியாகப் பெற்றதாக எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.''

திரு. ரைனம் பிறிதொரு இடத்தில் குறிக்கப்பட்டிருந்ததும் கவனத் திலெடுக்கத்தக்கது.

''வருடத்தின் முற்பகுதிகளில் தொடங்கி யூன் வரையிலும் பெரு மளவு பனங்கள்ளு பெறப்பட்டு, முக்கியமாக வடமராட்கி மக்களால் உணவாக நுகரப்பட்டது. பனம்பழத்தைத் தருகின்ற இந்தப் பயிர் யூலை மாதத்தில் பெய்கின்ற மழை காரணமாக, இறக்குமதியாகும் தானியங்களில் வீழ்ச்சியேற்படும் காலங்களில் அதைத் தாங்கிக் கொள் ளக் கூடியதாக மக்களுக்கு உதவுகின்றது''.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றும் ஏழை மக்கள் வாழும் குடிசைகள் மாத்திரமன்றி வசதியான வீடுகளையும் அமைப்பதற்கு பனை மரங்களே பாவிக்கப் பட்டு வருகின்றன. இது உறுதியானது மாத்திரமின்றி வலிமையான துமாக உள்ளது. இம்மரம் வெட்டுதல் ஒரு பொருளாதார முக்கியத் துவம் உள்ள தொழிலாக கடந்த நூற்றாண்டுகளில் விளங்கியது. வில்லியம் பேர்குசன் என்ற ஸ்கொல்லாந்தைச் சேர்ந்தவர் பின்வரு மாறு குறிப்பிடுகின்றார்.

"பெருந்தொகையான மரம் பருத்தித்துறைக்கூடாக யாழ்ப்பாண ணத்தின் பிற பகுதிகளுக்கும் சென்னைக்கும் ஏற்றுமதி செய்யப்பட் டன. சில குறிப்பிட்ட பருவகாலங்களில் மரம் தறித்தல் துப்பரவு செய்தல் ஆகிய நடவடிக்கைகளால் குடாநாட்டைச் சேர்ந்த ஆயிரக் கணக்கானோர் தொழில் வாய்ப்பைப் பெற்றனர். தறிக்கப்பட்ட இடங்களிலேயே தயார் நிலையில் இருக்கும் மரங்கள் பல்வேறு இடங் களிலிருந்து, முக்கியமாகப் பெண்கள் மூலம் பருத்தித்துறைக்குக் கொண்டுவரப்பட்டன. பின்னர் இவை தோணிகள் மூலமும் நாக பட்டினம், நாகூர், கூடலூர், பாண்டிச்சேரி, சென்னை ஆகிய இடங் களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, தானியம், பருத்தி துணி, உலோகம் போன்ற பொருட்களுக்குப் பண்டமாற்றுச் செய்யப்பட்டன".

19ம் நூற்றாண்டில் பனங் கைத் தொழில் என்ற தலைப்பில் திரு. ஏ. தேவராஜன் என்பவர் 'சற்றடேரிவியூ' என்ற ஆங்கில இதழொன்றில் எழுதிய கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது.

இக்குறிப்புக்கள் கடந்த காலங்களில் பனை எவ்வளவு பொருளா தார, முக்கியமுள்ளதொரு வளமாக இருந்தது என்பதை காட்டுகின் றன. இத்தகையதொரு வளம் இன்று பல சவால்களை எதிர்நோக்கி யிருக்கின்ற நமது வாழ்வில் உறுதுணையாக இருக்கக் கூடியது அதைக் காலத்திற்கேற்ப அபிவிருத்தி செய்வது நமது கைகளிலேயே உள்ளது.

## பனை பயிரிடுதலும் பருவமும்

*மழைக்காலமாகிய புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் ஒரு சாண் ஆழமுள்ள கிடங்குகளில் பனங்கொட்டையை பத்தடிக்கு ஒன் றாக நடுவர். நாட்டிய கொட்டைகள் எட்டுமாத காலத்தில் முளைக்கும். வேறு பயிர்களுக்குரிய எருவிடல், நீர்ப்பாய்ச்சுதல் முதலிய எத்தகைய சிரமமும் இல்லாமலே பனை வளரும். பனங்குருத்துக்களை வண்டுகள் அரிக்காது நாம் பாதுகாத்துக் கொள்ளுதல் ஒன்றே போதுமானதாகும். பனை முளைத்து ஓராண்டு கழிந்ததும் வடலி எனப்பெயர் பெறும்.*

*பனை உண்டான நிலம் மருதம் எனப்படும், வயல் நிலமாயின், அது பன்னிரண்டு ஆண்டுக்காலத்தில் பயன் தரும். பனையும் பெண்ணும் பன் னிரண்டாண்டிற் பயன்தரும் என்னும் பழமொழியும் இதனை வலியுறுத் துகிறது. சிலர் கடற்கரையை அடுத்த நெய்தல் நிலம் பனைக்கு ஏற்றது என்று கூறுவர். பனையின் இளமை கழியுங் காலத்தில் கங்குகள் தாமாகவே உதிரும். இதைக் கங்கொடியும் காலம் என்பர். கங்கொடி யுங் காலம் முப்பதாம் ஆண்டளவில் நிகழும் என்பர். கங்கொடியுங் காலத்தில் பனை நன்கு வளர்ச்சி பெறும். பனை சாதாரணமாக அறு பது அடிவரை உயர்ந்து வளரும்.*

நன்றி பனையின் பயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனையில் இருந்து சில மருத்துவப் பயன்கள்.

**பனை வெல்லம்**

மகப்பேற்றில் தாய்க்கும், சேய்க்கும் கருவுற்ற பெண்ணுக்கு நீர் மலர்ச்சிக்கல் நீக்க 4 இறாத்தல் சோற்றுக் கற்றாளை சருகை தண்ணீரில் கழுவி பின் பனை வெல்லத்தில் சேர்த்து 2 இலீற்றர் தண்ணீர் விட்டுக் கொதிக்க வைத்து ½ பாகமாக வற்றிய பின் அக் குடி நீரை இறக்கி வடிகட்டி காலையும், மாலையும் 60மி.லீ பருகி வர பெண்கள் ஆரோக்கியமாக வீட்டிலேயே சிக்கலின்றி மகப்பேறடையலாம். மகப்பேற்றின் பின் பனை வெல்லம் ஆக்கி காய்ந்த கருப்பட்டியைப் பயன்படுத்தி குடல்புண், வயிற்றுப்புண்ணை மாற்றலாம்.

காய்ந்த கருப்பட்டியில் புரோட்டின் 1.04, கொழுப்பு 0.19, சுக்றோஸ்76.86 குழுக்கோஸ் 1.66, பொஸ்பேற் 0.052.

மஞ்சள், திப்பிலி, சுக்கு, மிளகு, சித்தரத்தை, தேகவாசம் கசகசா 10கிராம், வெங்காயப்பூடு 20 கிராம், நல்லெண்ணை ½லீற்றர் சரக்குத்தூள் செய்து அதன் எடைக்கு 2 மடங்காக பனை வெல்லப் பாகு காய்ச்சி சரக்குத் தூளுடன் கலந்து லேகியமாக்கி பிரவசமான மூன்று நாளில் கொடுக்கலாம்.

**பனம் கற்கண்டு**

நீரிழிவு நோயாளருக்குப் பயன்படுகிறது. பெரியம்மை, வைசூரி வெப்ப வியாதிகளுக்கும் உணவாகச் சாப்பிட நீங்கும். கருவுற்ற பெண்கள் வெந்நீரில் கலந்து உண்டால் வயிற்றுப் பொருமல் நீங்கும். இருமலுக்கு நீரிலோ அல்லது பாலிலோ கரைத்துண்ண இருமல் நீங்கும்.

**பனம் பூ**

பனம்பூ மூன்று நாளில் உலர்ந்து விடும். அதையெடுத்துக் காச்சிகசாயமாகச் சாப்பிட்டு வந்தால் காச்சல் குணமாகும். இளம் பூவை ஆசனத்தில் (மலவாசலில்) கட்டி வர மூலநோய் நீங்கும்

**பனம் வேர்**

பனம் வேரை மூலப் பொருளாகக் கொண்டு செய்யும் லேகியம். உடல் வசிரகரத்தை ஏற்படுத்தும் பனைவேர் பொடி பல்வியாதிகளைத் தீர்ப்பதுடன் 100 வயது வரை பல் விளாது.

**பனம் குருத்து**

பனம் குருத்தை கணவன், மனைவி உட்கொண்டு வந்தால் கருத்தரிப்பு தடைப்படும்.

**ஓடியல்பிட்டு**

பால் சுரப்பு அதிகரிக்க ஒடியல் பிட்டும், நெத்தலியும் வெங்காயம் மிளகாயுடன் கலந்து அவித்துண்டால் தாய்ப்பால் அதிகரிக்கும்

● தெங்கு பனம்பொருள் சங்கங்களின் சமாசம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புழுக்கொடியல் மா பிஸ்கட்

40% கோதுமை மாவுடன் 25% புழுக்கொடியல் மாவினையும் சேர்த்து 25% பனம் சீனியையும் பயன்படுத்தி 10% கொக்கோ, வாசனை ஐசிங் போன்ற சுவையூட்டிகளையும் பயன்படுத்தி மிகவும் திறமானதும்' தரமானதும், சுவை மிக்க பனம் கொக்கோ பிஸ்கட், பனம் லெமன் பிஸ்கட் போன்றவற்றை உற்பத்தி செய்யலாம்.

இவ்வகையான பிஸ்கட் தென் பகுதியில் இருந்து வருவிக்கப் படும் பிஸ்கட்டுக்கு நிகராகவும், தரத்திலும், சுவையிலும் ஈடுகொடுக்கக் கூடியதாக உள்ளது. எமது உள்ளூர் உணவினை புதுவடிவமைப்பதும் மக்களின்விருப்பிற்குஏற்பமாற்றுவிப்பதும் அதிலுள்ள சிறப்பு அம்சங்களையும் ஊட்டச் சத்துக்களையும் தெரியப்படுத்துவதும் புதிய கண்டுபிடிப்பாளரினதும் உற்பத்தியாளரினதும் முக்கிய கடமையாகும்.

போர்க்கால கருமேகம் எமது மண்ணைச் சூழவுள்ள நேரத்தில் எமது மண்ணின் உற்பத்தியை பெருக்குவதும் எமது பாரம்பரிய உணவு வகைகளை நாகரீக உணவிற்கு ஒப்ப புதுவடிவமைப்பதும் அவசியமானதாகும்.

● இரா. பகவத்சிங்

## ஒடியல் மாத்தோசை

| வேண்டிய பொருட்கள் | அளவு |
|---|---|
| ஒடியல் மா | 500 கிராம் |
| உழுத்தம் பருப்பு | 250 கிராம் |
| வெண்காயம் | 125 கிராம் |
| சீரகம் | 1 தேக்கரண்டி |
| அப்பச்சோடா | |

### செய்முறை:

ஒடியல் மாவை நன்றாக அவித்து ஆற வைத்து, உழுந்தை நனையவிட்டுக் கழுவி நன்கு பசுந்தாக அரைத்து வெங்காயத்தையும் சீரகத்தையும் சேர்த்து அரைத்து எடுத்தபின் இதனுடன் ஒடியல்மாவையும், உப்பையும் சேர்த்து வைக்கவும். காலையில் தோசை ஊற்றமுன் அப்பச்சோடா சிறிதளவு சேர்த்துக் கலக்கி பின் ஊற்றி எடுக்கவும்.

### உணவின் போசாக்கு விகிதம்;

| | புரதம் | கொழுப்பு | காபோவைதரேற்று |
|---|---|---|---|
| 1 ஒடியல்மா | 5.5வீதம் | 3வீதம் | 74வீதம் |
| 2 உழுந்வ | 24வீதம் | 1வீதம் | 53வீதம் |

| | கல்சியம் 100கி | இரும்புச் சத்து | மி. கி. கலோரிகள் |
|---|---|---|---|
| 1 ஒடியல்மா | 130 | 4வீதம் | 320வீதம் |
| 2 உழுந்து | 200 | 9வீதம் | 317வீதம் |

### பயன்பாடு:

கோதுமை மாவுக்குப் பதிலாக ஒடியல்மா பாவிப்பதன் மூலம் உள்ளூர் வளப்பயன்பாடு அதிகரிப்பதோடு போசாக்கு உணவும் கிடைப்பதோடு அதன் குறைந்த செலவில் நாம் பெறக்கூடியதாக உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

● செ. கிருஷ்ணகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பரணின்
சிறுகதை

# பசி

வளவைவளவன்

"ரவி எழும்பனையா எழும்பி முகத்தைக் கழுவு. தங்கச்சியாக்கள் எழும்ப முன்னம் இந்தக் கஞ்சித் தண்ணியைக் காய்ச்சிப் போட்டு நானொருக்காய் விதானையார் வீட்டையெல்லே போகவேணும்" என்று அடுக்களைக்குள்ளிருந்தவாறு குரல் கொடுத்தாள் கனகம்.

ரவி சோம்பல் முறித்துக்கொண்டு மெல்லச் சிணுங்கியவாறு எழுந்து நடந்தான்.

இடுப்புக்குமேலே தோலைப் பிய்த்துக் கொண்டு வெளியே வரக் கங்கணம் கட்டிக்கொண்டிருந்த எலும்புக்கோர்வை கனகத்தின் கண்களில் பட்டுக் கொள்ள...... என்ன செய்வது.... குறுக்காலை போன ஆமிக்காறனாலை.... அந்த மனுசன் இப்பிடி அநியாயமாகச் செத்திருக்காட்டில் இப்ப என்ரைபிள்ளை இப்ப என்ன மாதிரி இந்தக்குஞ்சுகளைப் பட்டினி கிடக்காமல் பார்த்திருப்பன். போயும் போயும் இந்த நாட்டிலை தமிழராகப் பிறந்து நாங்கள் படுகிறதுன்பங்கள்...... கனகம் பானையைத் துளாவிக் கொண்டு மனத்துயர்களை அடக்கினாள்.

உலைமுகத்தில் பொங்கியெழுந்த நுரையை முந்திக் கொண்டு அவள் மனதில் பொங்கி வந்த துயரைப் புரிந்து கொள்வது யார்?

கனகத்தின் விழிகளில் நீர்த்திவலைகள்.

அம்மா...... பசி......க்குது...... குழந்தை ரமேஸ் எழுந்த இடத்திலிருந்தவாறே தன் குரலை வெளிப் படுத்தியது.

கனகம் கஞ்சிப்பானையை இறக்கி வைத்துவிட்டு ரமேஸ் இருந்த இடத்திற்கு வந்து விட்டாள்.

பொள்ளல் விழுந்த அந்தப் பாயில் திக்குக் கொருவராக நாலு குழந்தைகளும் தூங்கிக் கொண்டிருந்தன.

நடுவே இருந்த ரமேசின் முகத்தில் நெற்றிப்பரப்பிலி

பனை நட்டாலும் ஆயிரம்
பட்டாலும் ஆயிரம்.

ருந்து கழுத்து பூராவுமே வியர்வைத் துளிகள் முளை கொண்டிருந்தன.

அம்மா...... ப ... சி ... ச் சொல்ல முடியாது சொல்லித்தாயின் மடியில் சரிந்தான் ரமேஸ்.

கனகத்தின் கண்களில் கண்ணீர்ப்பூக்கள் பொல பொலத்துச் சொரிந்தன.

இரவு சாப்பிடாமல் கிடந்த பிள்ளைக்குப் பசிக்களை...... அதுதான் இப்பிடி வேர்க்குது ... ... ரவியைக் கூப்பிட நினைத்த கனகம் ஏதோ நினைத்தவளாக, 'இரையாவாறன்' என்று விட்டு எழுந்து சென்று துணிஒன்றை நீரில் நனைத்து இலேசாகப் பிழிந்து விட்டுக் கொண்டு வந்து அந்த ஈரத்துணியால் ரமேசின் முகத்தையும் உடலையும் துடைத்து விட்டாள். பின் தன் முன்தானைச் சேலையால் அந்த ஈரம் போகும் வரை உரசித் துடைத்தாள்.

''கஞ்சி ஆறட்டும் பிள்ளைக்கு குடிக்கத் தாறன்... என்று செல்லமாகக் கூறி ரமேசின் உச்சியைமோர்ந்து விட்டு, கஞ்சியை பெரிய சட்டி ஒன்றில் ஊற்றினாள் கனகம்.

கஞ்சி ஆறட்டும்......

ரமேஸ் கஞ்சியைப் பார்த்துக் கொண்டிருந்தான். கனகம் மற்றக் குழந்தைகளையும் ஒவ்வொன்றாக எழுப்பி முகம் கழுவித் துடைத்துக் கொண்டு வந்து எல்லோருக்கும் ஒவ்வொரு ஏதனங்களில் வார்த்துக் கொடுத்தாள்.

ரவி கிணற்றடியை விட்டு இன்னமும் வரவேஇல்லை அவன் எதையோ யோசித்தவாறு நின்றான்.

உப்பிடித்தான் மூத்தவன் சதீஷம் நிண்டு போட்டு போயிட்டான். கனகம் எட்டி எட்டி மகனைப் பார்த்தவாறே சிறிசுகளைக் கவனித்துக் கொண்டிருந்தாள்,

ரவி இன்னமும் வந்தபாடாயில்லை......''அம்மா இண்டைக்குளென்னகிழமெ'' ரவிதான் கேட்டான்.

''இவனுக்கு இப்ப என்ன தேவை வந்தது. வெள்ளிக்கிழமையிலதானே போக்கறப் போனவகங்கடை செல்பட்டுத் அந்த மனுசன் .....ம் ......

''அன்று அண்ணா எங்கையம்மா போட்டுது — நீ ஏன் அழுகிறாய். அண்ணாவும் அப்பா போனமாதிரிப் போட்டுதே!''

''அப்பிடிச் சொல்லாதை அண்ணா வருவான்.''

''பின்னை ஏன் நீ அழுகிறாய்...... அண்ணனை எங்கையெண்டு சொல்லு நான் போய் கூடடிவாறன்.

நாலு வருசத்துக்கு முன் நடந்த அந்தச் சம்பவங்கள் ஒருகணம் மனதில் தோன்றி மறைய...... ''இஞ்சைவா ராசா...... இப்ப ஏன் உனக்குக்கிழமை... நான் ஒருக்கால் விதானை வீட்டை போட்டுவர வேணுமெல்லே' ...... கனகம் இழுத்து கதையின் திசையை மாற்றினாள்.''

ரவி சிரித்துக் கொண்டேவந்தான். ''அம்மா நிவாரணக் காட்டுக்குத்தானே போறியள்?

''ஓமய்யா அதை யெண்டாலும் வாங்கினால்தானே உங்களுக்குப் பசிக்காமல் நான் சமைச்சுத் தருவன். பால்மாவும் தருவாங்களாம்...... நீ தம்பிதங்கச்சியோடை இருந்து கொள் நான் ஓடிப் போய் ஓடி வந்திடுவன் என்ன......?''

............

கஞ்சியைக் குடிச்சுக் சொன்னான் ரவி ''குண்டாலையும் செல்லாலையும் ஆக்களைச் சாக்காட்டிப் போட்டு நிவாரணம் தாறான் நிவாரணம்.........''
நீங்கள் பாய்ஞ்சு விழுந்து வாங்குங்கோ......''மனதில் ஏதோ ஒரு வைரத்தின் தாக்கமாக அவன் வார்த்தைகள் வெளிப்படுவதாகக் கனகம் உணர்ந்து கொண்டாள்.

கனகம் ஒருவாறு மனதைத் தேற்றியவாறு கொய்யகச் சேலையை இழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு முன்தானைச் சேலையை அவிழ்த்து உதறி முகத்தைத் துடைத்தவாறு புறப்பட்டு விட்டாள்.

ரவியும் ஏனைய குழந்தைகளும் அந்தக் கஞ்கியை ஊதிஊதி வயிற்றை நிரப்பிக் கொண்டிருந்தனர்.

கனகம் பலவித சிந்தனைகளையும் சுமந்தவாறு எட்டி மிதித்து நடந்து கொண்டிருந்தாள். சனம் அதிகம் வந்து கூடிவிட்டுதெண்டால் நேரத்தோடை வரேலாது என்ற அச்சம் மேலோங்க அவள் சென்று கொண்டிருந்தாள்.

முந்தின காலங்களிலை புருசனில்லாதவைக்குப் பிச்சைக் காசுக்கெண்டு ஒரு காட் குடுக்கிறவை. அந்தக் காட்டுக்கு மிஞ்சி மிஞ்சிப் போனால் ஒரு விதானை பிரிவிலை 20 பேருக்கு மேலே இருக்காது. இப்ப அப்பிடியே......... ஆயிரம் நூறெண்டு சுட்டும் குண்டு போட்டும் செல்லடியெண்டு எல்லாவழியாலும் சாகடிச்சுப் போட்டு...... சின்னப்பிள்ளை எண்டாலும் ரவி கேட்டதன் நியாயம் இப்போதுதான்' அவளிடம் பூதாகாரமெடுத்தது.

''ஆக்களை செல்லாலையும் குண்டுகளாலையும் கொல்லிப் போட்டு நிவாரணமோ குடுக்கிறாங்கள்.''

சே... எவ்வளவு அர்த்த புஷ்டியானவார்த்தைகள்...... என்ரை பிள்ளைக்கு இப்பதான் பத்து வயது. இப்பவே... இப்பிடிச் சிந்திக்கிறவனை......

மூத்தவன் சதீஸ்கூட எவ்வளவு கெட்டிக்காரன். அரசாங்கமோ முந்தினது இயக்கமோ முந்தினதம்மா? என்று ஒரு தடவை கேட்டு விட்டுப்பதிலை எதிர்பாராமலேயே, அரசாங்கங்கள் எல்லாமே எல்லா இனங்களையும் சமமாக நடாத்தி இருக்குமானால் எந்த ஒரு நாட்டிலும் புரட்சிகர இயக்கங்கள் எதுவும் தோன்றி இருக்கவும் முடியாது போரும் இத்தனை அழிவுகளும் கூட ஏற்பட்டிருக்காது தானே. விசயம் தெரியாத சனங்கள் இயக்கங்களைத் திட்டிக் கொண்டே இருக்கும் வரை அரசுகளும் தங்கடை நாடகத்தை நடத்திக் கொண்டுதானிருக்கும்.......

இந்த நாளையிலை சின்னஞ் சிறிசுகளுக்குத்தான் எவ்வளவு பெரிய அறிவும்...... சிந்தனையும்-எங்கட காலத்திலை நாங்கள் உந்த வயதிலை......... ஓ என்ன செல்வங்களுக்கு இந்த வயதிலை தகப்பனில்லாத பிள்ளைகளாய்ப் போச்சுதுகள் ..... கனத்த மனதிலிருந்து வெளிப்பட்ட பெருமூச்சு மெல்ல வெளிப்பட்டுக் காற்றில் கரைந்தது.

அன்று ஒரு வெள்ளிக்கிழமை மாலைக் கருக்கல் இருள் பூமியை எங்கும் மைவண்ணமாக்கிக் கொண்டிருந்தது. யுத்தகாலத்தில் எழுந்த துப்பாக்கி வேட்டொலிபோல நாற்திசையிலிருந்தும் கூவிச் சிதறி வெடித்தன செல்கள்.

நாடு பூராகவும் செல்களின் ஆட்டம். நடைபாதை தோறும்...... வீடுகள் தோறும்...... ஓ எத்தனை மனித உடல்கள்.... அங்கமிழந்து உருக்குலைந்து

எங்கும் வெடித்தெறிந்த செல்லின் ஓசை நின்றது. அந்த ஒருகணத்தில் தான் எத்தனை அவலக் குரல்கள்...... மெல்ல சதீஸ் வெளியே...... பங்கரை விட்டு வெளியே வந்து நிற்கின்றான்.

அடுத்தடுத்த வீடுகளில் அவலக் குரல்கள்...... இதயத்தைப் பிழிந்து கொள்ள மெல்லத்தரையை நீட்டியவாறு பிள்ளைகளோடு வந்த கனகம்...... ஐயோ அப்பா...... என்று சதீசின் ''தீனக்குரல்......'' என்ரை ராசா...... எங்கை... எங்கை ஐயோ ...... அம்மா ...... அப்பாவின் தலையைக் காணோம்....

கனகம் மூர்ச்சித்து வீழ்ந்தாள்.

பொழுது விடிந்த மறுநாள் கனகத்தின் புருசனோடு நாலு மனித உடல்கள் சிதையில் நீறின.

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.............

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனகத்தின் நெஞ்சத்தில் கனலெடுத்து காற்றோடு காற்றானது. கண்மூடித்தனமான இலக்கற்ற அரசும் ஆட்சியாலும இப்பிடி அப லைகளாக்கப் பட்ட பெண்கள் பிள்ளைகள்.

பெண்களின் தாலியை அறுத்துவிட்டுப் பூக்கூடை நிவாரணப் பரிசளிக்கும் அரசு...... கண்களைப் பிடுங்கி எறிந்து விட்டு கண்ணாடி கொடுக்கும்.... இப்படிப் பித்தலாட்டம் செய்வதுதான் ஆட்சி அதிகாரம்— இது மாற்றாத வரை நாமும் நமதுமக்களும் சுண்டைக்காய்கள் தான்...

மகன் சதீஷின் குரலும் ...... அந்தக்கோர நிகழ்வுகளும்...... ஒன்றன் பின் ஒன்றாக எழுந்து வந்து கனகத்தை தடுக்கும்.

மகன் போராளியாகப் போராடிக்கொண்டிருக்கும் போது...... கேவலம் இந்த அரசின் பிச்சைப் பணத்தையா நீ ஏற்கப் போகிறாய்.

"அரசின் வஞ்சகத்தை வஞ்சகத்தால்தான் வெல்ல வேண்டும்"

பழிக்குப் பழி......

மனதில் ஆயிரம் துப்பாக்கிச் சன்னங்களின் துளைப்பு. கனகம் எந்த அவஸ்தைகளையும் பொருட்படுத்தவே இல்லை

விதானையார் வீட்டில் ஏதோ ... நாலு ஐந்துபேர் இப்போது தான் தலை நீட்டிக் கொண்டிருந்தனர்.

கனகம்... நீ உதவியில்லாதநீ... தூரம் வா... வா..

விதானையாரின் கருணை கனகத்தை விடுவித்துக் கொண்டது.

பிள்ளைகள் எப்படியோ கஞ்சியைக் குடித்து விட்டுப் பேசாமல் விளையாடுங்கள்...... ஆனால்... ரவிவின்... வார்த்தைகளும் யோசனைகளும்... கனகம் சிந்தனையோடு தான் நடந்து கொண்டிருந்தாள் கனகத்தின் உடல் வியர்த்துக் கொட்டியது.

கனகம் வீடு வந்து சேர்ந்த போது சிறிசுகள் எல்லாம் கூடி விளையாடிக் கொண்டிருந்தனர்.

கனகத்தின் கண்கள் ரவியின் தோற்றம் தெரியாதா என்ற ஏக்கத்தில் அங்குமிங்குமாக...

ரவியைக் காணவில்லை.

வீட்டிற்கு உள்ளும் இல்லை ..... அடுக்களைப் பக்கம் புகுந்தபோது கஞ்சிப் பானையருகே பெட்டி ஒன்றுக்குள் ஒரு மடித்த காகிதம்......

நடுங்கும் கரங்களால் மெல்லக் குனிந்து அந்தக் கடிதத்தை எடுத்துப் பிரித்தாள்.

அம்மா! வருவாயற்ற ஏழைகளுக்கு வயிற்றுப் பசி என்ன செய்வது உலகில் எத்தனையோ பசிகள் மனிதனை ஆட்கொண்டு வதைக்கின்றன.

எல்லாவற்றையும் விட முக்கியமானது எங்களது சுதந்திரம் அம்மா அதனால் தான் நம் நாட்டை மீட்கும் சுதந்திரப் பசியோடு போராடிக் கொண்டிருக்கும் போராளிகளோடு சேர்த்து நானும் போராடினால் தான் இந்தப்பசி தீரும். அந்தச் சுதந்திரப் பசி தீரும் வரை உங்களிட மிருந்து விலகி இருக்கும் மகன்......

□□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இலந்தைக்காடு" கிராமத்திற்கு நேரில் சென்று கண்டதும், கேட்டதும்.

**நேருக்கு நேர்**

"எமது மண்ணும் இயற்கையும் எமது தொழிலுககு உதவி செய்யும் போது நாம் ஏன் உற்பத்தித் தொழிலான சீவல் தொழிலுக்குத் தயங்க வேண்டும்".

யாழ் மாவட்டம் முழுவதும் பனம் பொருட்களை அதிகம் அறிமுகப் முகப்படுத்தியவர்கள் என்ற பெருமை வடமராட்சி மக்களையே சாரும்

மேலும் வடமராட்சியில் பனம் பொருட்கள் உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர் என்ற முழுவதற்குமே முக்கியத்துவம் வாய்ந்தவர்கள் என்றால் "இலந்தைக்காடு" என்னும் ஓர் குக்கிராமத்து மக்கள் என்று தான் கூறவேண்டும்.


இவர்கள் இன்று நேற்றல்ல பண்டைய காலந் தொட்டு பனை மரங்களுடன் இரண்டறக் கலந்தவர்கள்.

நாம் அக்கிராமத்தை நோக்கி காலை வேளை சென்றபோது "இலந்தைக்காடு" என்ற பெயர் இருந்தமையால் அந்த மரங்களையே மனதில் பதிய வைத்தபடி சென்று கொண்டிருந்தோம், ஆனால் எமக்கு பெருத்த ஏமாற்றம் தான் கிடைத்தது. காரணம் அங்கு இலந்தை மரத்திற்குப் பதிலாக ஒரே பனஞ்சோலை மயமாகவே இருந்தது.

ஒவ்வொரு பனையின் கீழும் பெரிய பெரிய அளவிலான மண் பானைகள் பதநீரின் நுரைகள் வெளியே தள்ளிய வண்ணம். அவற்றை இறக்குவதற்குப் பயன்படுத்தப் படும் ஓலையிலான பானைவடிவ அமைப்பினைக் கொண்ட ஓலைப்பட்டைகளும் கைபிடிபோட்ட அமைப்பில் காணப்பட்டன சில தொழிலாளர்கள் அவர்களின் தொழிலுக்கேற்ற நடைமுறைத்தேவையான தளநார் இயனக்கூடு (கத்தி போன்ற ஆயுதங்கள் வைப்பதற்கான உறை) இடையில் கயிறுகளால் கட்டியும் கால் அணியாக (அடையாளம் வராமல்) காதோல், நெஞ்சுத்தோல் (நெஞ்சில் அடையாளம் வராமல் பாதுகாக்க) இயனக்கூட்டின்மேல் (காலுக்குப்போட்டுப் பனை ஏறும்) தளநார். பதநீர் இறக்குவதற்கான மண்முட்டிகளும், பனம் ஓலையிலான பட்டைகளும் தொங்கவிட்டவாறு வீறுநடை போட்டுச் சென்றதானது போர்க்களத்துக்கு சீருடை அணிந்து வீர நடை போட்டுச் சென்ற போர் வீரர்களைப் போன்றிருந்தது. சில பனைகளின்கீழ் ஆண்களுக்கு உதவியாக பெண்கள் அவர்களுக்கு காலை உணவுகளும் பனங் கட்டியுடன் தேனீரும் பரிமாறிக்கொண்டிருந்தார்கள் சில பெண்கள் தலையிலும்

**முயற்சியால் ஆக்கிய நீரை ஒத்தகூழ்
அதை விடப் பன்மடங்கு மேலானது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"நாம் தாழ்ந்த சாதியில்லை தாழ்த்தப்பட்ட சாதி என்பதை உலகம் புரிந்து விட்டது"

- நாகம்மா

இடையிலும் (இடுப்பிலும்) பெரிய பானைகளில் பதநீரைக் கொண்டு வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள்.

இவர்களின் நடவடிக்கைகளை உற்றுக் கவனித்தவாறு நிற்கும்போது பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் வெள்ளைச் சீருடைகளுடன் திரள் திரளாகச் சென்று கொண்டிருந்தார்கள். அவர்களிற் சிலர் புழுக்கொடியல், அவித்த பனங்கிழங்கு போன்றவற்றைச் சாப்பிட்டவாறும் சிலர் கடதாசிப் பொதியினுள் புழுக்கொடியல், அவித்த பனங்கிழங்கு போன்றவற்றை மறைத்தவண்ணமும் கொண்டு செல்வதையும் காண முடிந்தது. "நீங்கள் எவ்விடத்தைச் சேர்ந்த மாணவர்கள் என்றும், எந்தப் பாடசாலைக்குச் செல்கிறீர்கள் என்றும், ஏன் வழிநெடுக உண்கிறீர்கள் என்றும் வினவினோம்.

அவர்கள் தாம் இலந்தைக்காட்டைச் சேர்ந்தவர்கள் என்றும், காலைவேளை அம்மாக்களும், அப்பாக்களும் தமது சீவல் தொழிலின் விசயமாக பனங்காணிகளுக்குச் சென்றுவிடுவதால் காலை வேளை உணவு சமைப்பதில் காலதாமதமாவதாலும் தாம் காலை உணவாகப் புழுக்கொடியல், அவித்த பனங்கிழங்கு போன்றவற்றை உண்பதாகவும், பாடசாலை தூரம் இருப்பதால் மதிய உணவிற்காகவும் பனம்பழக் காலங்களில் பணாட்டு போன்றவற்றையும் உணவாகப் பயன்படுத்துவதாகவும் தெரிவித்தார்கள். அதன்பின் அவ்விடத்தை விட்டு வேறுபுறம் எம்பார்வையைச் செலுத்தினோம்.

ஒரு சில கல் வீடுகள் தோன்றியபோதும் அங்கு பெருமளவில் ஓலை வீடுகளே காணப்பட்டன.

சில வீடுகளில் "மத்துக் கடையும் போது ஏற்படும் ஓசைபோல்" ஓசையுடன் புகையும், பனங்கட்டி (பனம் வெல்லம்) வாசனையும் சேர்ந்து வந்தன. அவர்களின் வீடுகளை நோக்கி எம்மை அறிமுகம் செய்து கொண்டு உள்ளே சென்றோம். பல வயதானவர்களும், இளைஞர்களும் எம்மை வரவேற்றார்கள். வயதானவர்களின் தோற்றம் திடகாத்திரமாகவும் சிலர் முன்பு புரிந்த தொழிற் கஷ்டம் காரணமாக மெலிந்தும் காணப்பட்டார்கள் பெண்கள் அன்றைய சாதியமைப்பின் சின்னமாக குறுக்குக்கட்டான சேலையுடனும் (அதாவது மேல் சட்டையின்றி மார்புக்குக் குறுக்காக கைத்தறிச் சேலையுடனும்) இன்றைய இளைஞர்கள் நவீன ஆடைகள் அணிந்து சுதந்திர சமுதாயத்தினராகவும் காட்சியளித்தார்கள். வயதான நாகம்மாவிடம் அவரின் உடைபற்றிக் கேட்டபோது அவர் அன்றைய சாதிமுறைபற்றியும் அதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மை பற்றியும் தெரிவித்த கருத்தில் எம்மைக் கவர்ந்தவைகளில் ஒன்று. பனைச் சீவல்'' தொழிலை வைத்தே எம்மைத் தாழ்ந்த சாதியாகக் கணித்தார்கள். நாம் தாழ்ந்த சாதியில்லை தாழ்த்தப்பட்ட சாதி என்பதை இன்று உலகமும் புரிந்து விட்டது. அன்று நாம் வீதியில் செல்வதற்கும்கூட எமக்கு உரிமை மறுக்கப்பட்டது அப்படி நாம் செல்ல வேண்டுமாயின் எமது ஊருக்குள் செல்வாக்குள்ள பிரமுகரிடமிருந்து அனுமதி பெற வேண்டும் அவர்களின் அனுமதியுடன் கட்டளையும் ஒன்றும் இருக்கும். அது எம் போன்றவர்கள் கிழிந்த ஆடை தான் போட வேண்டும். பெண்கள் மேற் சட்டை போடக் கூடாது, செத்த வீட்டில் மேளம் (பறை) அடிக்கக் கூடாது அப்படி அடிப்பதாயின் ஒட்டையாக்கப்பட்ட மேளம் தான் அடிக்கலாம். தண்ணீர் பொதுக்கிணறுகளில் அள்ளக் கூடாது. அவர்கள் தான் அள்ளி ஊத்த வேண்டும். சிலர் வேலியூடாக வாழை மடல் செருகி அதற்குள்ளாக அவர்கள் உள் நின்ற வண்ணம் நீர் ஊற்றுவார்கள் நாம் அதை வெளியில் நின்ற வாறு ஏந்த வேண்டும்''

நாம் வெளியில் செல்லும் போது (முதிர்ந்த பனை ஓலை) காவோலை மட்டையுடன் எமது இடையில் கட்டிய வண்ணம் (ஓலை எமக்குப் பின்னால் தரையில் இழுபட்ட வண்ணம் இருக்க வேண்டும்) இதில் சில அர்த்தங்கள் உண்டு. ஒன்று அந்த ஓலைச் சத்தம் கேட்கும் போது எமது இனம் வீதியில் நடமாடுகின்றது என்னும் எச்சரிக்கை. மற்றொன்று எமது காலடி ஓலையால் அழிக்கப்படுகின்றது எமது காலடியில் கூட அவர்களது காலடி படக் கூடாது என்பது அன்றைய பரம்பரையினரின் ஆணித்தரமான கட்டுப்பாடுகள்'

எமது பிள்ளைகள் கல்வி கற்கக்கூடாது என்றும் ஒரு சட்டம். அவற்றை கிறீஸ்தவ பாதிரிமார் உதவியினால் ஓரளவு எம்மால் தகர்க்க முடிந்தது (கிறீஸ்தவ மதம் பெருமளவில் பரவ இச் சந்தர்ப்பமும் ஒன்றாகும்)




இப்படி எமது பிள்ளைகள் ஒன்று இரண்டு பள்ளியில் படித்ததினால் தான் இன்று எம்மால் சுதந்திரமாகவும எமது பிள்ளைகள் நாகரீகமாகவும் நடமாடுவதுடன் எமது தொழிலும் அபிவிருத்தி அடைந்தது இன்று தமிழீழ ஆய்வு நிறுவன பனை தென்னை வள அபிவிருத்தி ஒன்றியத்தின் மூலம் பங்கிப் பெருகி தமிழீழத்திற்கே நாம் ஒரு பங்களிப்பாக விளங்குகின்றோம்'' என்றார்.

அடுத்து அதேஇடத்தைச்சேர்ந்த ஒரு சீவல் தொழிலாளியாகிய கதிரன் சிவலோகம் (இலந்தைக்காடு சீவல் தொழில் உப குழுத்தலைவர்) அவர்களைச் சந்தித்தோம்.

"நான் இத்தொழிலுக்கு பரம்பரை பரம்பரையாக வந்தவன் சுமார் முப்பத்தியாறு வருடமாக சீவல் தொழில் செய்து வருகிறேன். ஒருகாலம் யாழ் குடாநாட்டிற்கே எமது குக்கிராமமான இலந்தைக் காட்டு மக்களே பனங்கட்டி, பனாட்டு, ஒடியல், புழுக்கொடியல், பனங்கிழங்கு. பெட்டி, பாய், கல்லாக்காரம்; தோட்டத்திற்கு நீர் இறைக்கும் பட்டை. பெட்டி போன்றவற்றுடன் பனை சம்பந்தமான பொருட்களையும் வழங்கிவந்தார்கள். இன்றும் வழங்குகின்றோம்.

இவற்றை மேலும் விருத்தி செய்வதற்கு பல உதவிகளை நாம் எதிர்பார்க்கின்றோம் பல வருடங்களுக்கு முன்பாக நாமே பனைகளை குத்தகைக்கு எடுத்து செய்யமாக சீவல் தொழில் செய்து வந்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அப்போது எமக்குப் பெரும் லாபம் கிடைத்தது. அதேவேளை வீடுகளில் மதுபானப்பிரியர்கள் தாமாகவே வந்து கள்ளைப்பருகுவதுடன் அசிங்கமான வார்த்தைகளை பேசிச் செல்வதுடன் சீழ்த்தரமான செயல்களிலும் ஈடுபட்டும் எமது சமூகத்தை சீரழித்தும் வந்தார்கள். மேலும் அக்காலங்களில் (கருப்பநீர்) பதநீர் புழுக் கொடியல் பெட்டி, பாய் போன்ற வீட்டுப் பாவனைப் பொருட்களையும் எமது தாய்மார் பலமைல் தூரம் தலையில் சுமந்து கொண்டு நடந்து சென்று சந்தைப்படுத்தி வந்தார்கள்''

'ஆனால் இன்று பனை தென்னை வள அபிவிருத்தி ஒன்றியத்தின் கீழ் நாம் இணைந்ததின் பின், எமக்கு அண்மையில் கொள்வனவு நிலையங்களை ஏற்படுத்தித் தந்ததினால் எமது உற்பத்திகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. வீடுகளில் (மதுபானமான) கள் விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டதினால் எமது குடும்பங்களில் சமூக நிலைகளும் எமது வளரும் சமுதாயங்களும் நல்ல வழியில் செயல்படத் தொடங்கியுள்ளன.

"எமது இலந்தைக் காட்டு கிராமத்தைச் சூழ ஒரு லட்சம் பனைக்கும் அதிகமாக உள்ளன. இங்கு பல வருடங்களுக்கு முன்பாக சீனி பனங்கட்டி தொழிற்சாலை ஒன்று இருந்தது. அப்போது அதை நடைமுறைப்படுத்தி வந்த நிர்வாகம் சீர்கெட்டதனால் அது கைவிடப்பட்டது. அதற்கான கட்டிடம் இன்றும் அப்படியே உள்ளது. அது இயங்காததனாலேயே இன்று பெரும்பாலான சீவல் தொழிலாளிகள் மதுபானமான கள்ளை இறக்குகிறார்கள். இது தேவையற்ற ஒன்று என்று எமக்குத் தெரியும். இருப்பினும் தொழிற்சாலை வசதின்மையால் நாம் கள்ளைச் சீவுகின்றோம்.

இன்று ஒரு சிறந்த சீவல் தொழிலாளி 22000 ரூபாவுக்கு மேல் ஊதியம பெறக்கூடியதாக உள்ளது. முப்பத்தைந்து வருடமாக மேற்படி தொழிலைச் செய்து வரும் எனக்கு அண்மையில் எமது பனை தென்னை வள அபிவிருத்தி ஒன்றியம் நல்லது செய்து நாட்டையும், எம்மையும் காப்பாற்றி வருகின்றது. ஆனால் தற்போது தான் ஒரு புதிய பிரச்சினை ஏற்பட்டுவருகிறது''

'அது என்னவெனில் முன்பு எமக்குப் பனைகளைக் குத்தகை முறைக்குத் தந்த பனைச் சொந்தக்காரர்கள் எமது உழைப்பு ஊதியத்தை எமது தொழிலுக்கு தமிழீழத்தில் இருக்கும் மதிப்பினைக்கண்டு பொறாமைகொள்வதுடன், நாம் சீவல் தொழிலைச் செய்து வந்த பனைகள் தமக்கு பனம்பழம் எடுப்பதற்குப் பனை தேவை என்றும், தமக்கும் முறைக் கருப்பநீர் (பதநீர்) தேவை என்று முரண்டுபிடிப்பதோடு சீவல் பனைகளையே தறித்தும் வருகின்றனர். இவர்களிடமிருந்து எம்மை எமது ஒன்றியம் காப்பாற்றும் என்ற நம்பிக்கையுடன் இருக்கின்றோம் என்றார்

அவர் மேலும் தெரிவிக்கையில், "எமது சீவல் தொழிலாழி ஒருவர் குறைந்தது முப்பது பனை மரங்களைச் சீவுகின்றார். காலை 4.00 மணிக்கு ஆரம்பித்தாராக இருந்தால் மாலை 2.00 மணிக்கும் சிலரின் தொழில்கள் முடிவடையும். எமக்கு கள்ளுத்தவறணையாக பனங்கட்டிச் சீனித் தொழிற்சாலையாக இருக்கும் நிலையங்கள் வெகுதொலைவில் இருப்பதால் இவற்றை நாம் வேலை செய்த களைப்புடன் கொண்டு சென்று கொடுப்பது கஷ்டம் மேலும் பல மணி நேரமாக பதநீரோ கள்ளோ இருப்பாக இருப்பின் பழுதடைய

நேரும். ''இதனைக் தவிர்ப்பதற்கு குறைந்தது கால்மைலுக்குட்பட்ட இடத்தில் ஒவ்வொரு நிலையங்களையோ அல்லது கொள்முதல் செய்யும் வாகனங்களையோ அனுப்பினால் பலருக்கும் பயன்படும் என்பது எமது கருத்து.

''தற்போது மேற்படி காரணங்களால் பலர் சீவல் தொழிலையும் குறைத்து வருகின்றார்கள் நாம் கூடுதலான அளவு எமது சூழலில் உள்ள பொருட்களையே பயன்படுத்தி எமது உற்பத்திகளைப் பெருக்குகின்றோம். எமது பதநீருக்குத் தேவையான சுண்ணாம்பினை எமது பெண்கள் கடற்கரைக்குச் சென்று கடலினுள் இருக்கும் பார்சுற்களை (சுண்ணாம்புக்கல்) தோண்டி எடுத்து வந்து உயர மண் அடுப்பினை உருவாக்கி காய்ந்த பனம் ஊமல் கொட்டைகளை (விதைகள்) விறகாக பயன்படுத்தி சுண்ணாம்புக் கல்லை வேகவைத்து அடித்துடைத்து அரித்து மாவாக்கித் தருகின்றார்கள். அதையே நாம் பயன் படுத்துகின்றோம். மேலும் எமதுபதநீரினை பனங்கட்டி (வெல்லம்) யாகவோ பாணியாகவோ மாற்றுவதற்கு பட்டபனை விறகினையும் வெட்டிய பனையின் அடிப்பகுதியையும் நிலத்தில் தோண்டி விற்கப் பயன்படுத்துகின்றோம்''

''எனவே, எமது மண்ணும் இயற்கையும் எமது தொழிலுக்கு உதவி செய்யும் போது நாம் ஏன் உற்பத்தித் தொழிலான சீவல் தொழிலுக்குத் தயங்க வேண்டும். என்றும் வினா எழுப்பினார் சிவலோகம்.

விடயத்தை முடித்துக் கொண்டு இவரது கள்ளுத் தவறணையின் அங்கத்துவ சீவல் தொழிலாளியான வல்வெட்டித்தனாலையைச் சேர்ந்த வல்லிபுரம் துரைசாமி என்பவரைச் சந்தித்தபோது அவர் தெரிவித்த கருத்துக்கள்;

''1991ஆம் ஆண்டிற்கு முதல் எமக்குப் பல சட்ட ஒழுங்கு சீர்கேடு காரணமாக தொழிலில் பல கஸ்டங்களை அனுபவித்து வந்தோம். 1991 தொடக்கம் 1992 ஆண்டு நடக்கும் இக்காலத்திலும் புதிய பொறுப்பினை ஏற்று நடாத்தும் பனை தென்னை வள அபிவிருத்தி ஒன்றியத்தின் மூலம் எமக்கு கள்ளின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. இது எமது சீவல் தொழிலாளருக்கு கிடைத்துள்ள பெரும் ஊக்கமாகும் மேலும், தற்போது முன்பு எமது கள்ளினை கூடாது என்று கூறியும் சங்கத்தினர் ஊற்றினர், சிலர் கழிவுஎன்று கழித்தும் வந்தனர். ஆனால் இன்று அப்படியில்லாமல் முழுக்கள்ளையும் ஏற்றுக்கொள்வதோடு மேலதிககள்ளினை வடிசாலைக்கும் ஏற்றுகின்றார்கள். எமது நிலையை உணர்ந்து இந்நடவடிக்கையினை எடுத்தமைக்காக நாம் என்றும் ஒன்றியத்திற்கு கடமைப்பட்டவர்கள்''

நாம் சீவல் தொழிலையே நம்பி வாழ்பவர்கள், எம்மால் ஒரு குறிப்பிட்ட வயதின்பின் (குறிப்பாக 60 வயதிற்கு மேல்) தொழில் செய்ய முடியாத நிலை ஏற்படும். இதை நாம் முன்பு அதாவது 1990 ஆண்டில் உள்ள நிர்வாகத்திடம் தெரிவித்தோம். அதற்கு அவர்கள் நடவடிக்கை எடுப்பதாக எமது தொழிலாளர்களிடம் இருந்து மாதம் சிறு தொகை கழித்தும் வந்தார்கள். அதற்கு இதுவரை என்ன நடந்தது என்று தெரியவில்லை எனவே, எமது பனை தென்னை வள அபிவிருத்தி ஒன்றியம் இதனையும் கருத்திற் கொண்டு எமக்கு ஓய்வூதியமாக நாம் சலுகை பெறுவதற்கும் உதவிசெய்ய வேண்டும். அத்தோடு தொழில் ரீதியான பாதிப்புக்கள் ஏற்படும் போது, உதாரணமாக பெருந் தொகையான பனைகளைச் சீவும் தொழிலாளி சில நாட்கள் சுகயீனமாக படுக்க நேர்ந்தால் அல்லது பனையால் சறுக்கி விழுந்து செயல்படமுடியாத நிலை ஏற்பட்டால் மேற்படி தொழிலாளி தொழில் செய்யும் பனைகளை வேறு தொழிலாளிகள் மூலம் சம்பந்தப்பட்ட தொழிலைத் தொடரவும் பாதிப்புற்ற தொழிலாளிக்கு நியாயமான ஊதியத்தை வளங்கவும் ஒத்துழைப்புத் தருமாறு ''காப்பரண் மூலம்'' வேண்டுகின்றோம்.

''மேலும் எமது இந்தைக் காட்டுக் கிராமத்தில் படித்த பன்னவேலை தெரிந்த பெண்கள் பலர் இருக்கின்றார்கள். இவர்களிற்பலர் பன்னவேலை செய்தும் சந்தைப் படுத்த முடியாத நிலையிலும், சிலர் புதிய பாணியிலான பன்னவேலைகளில் ஆர்வம் இருந்தும் பழகமுடியாத நிலையிலும் இருக்கின்றார்கள். இவ்வேலைக்குத் தேவையான ஓலை மட்டை போன்றவை இருந்தும் செயற்படாமல் இருக்கும் இவர்களுக்கு ஒரு பயிற்சி நிலையம் அமைத்துக் கொடுப்பதன் மூலம் எமது தமிழீழத்தையும் எம் போன்ற சீவல் தொழிலாளர்களையும் பாதுகாக்கவும் முடியும் என்றும் எண்ணுகிறேன்.

எமது பதநீருக்கோ அல்லது கள்ளுக்கோ மண்முட்டிகளும் ஓலைப் பட்டைகளுமே சிறந்தது. எனவே பொலித்தீன் பைகள் பயன்படுத்த முயல்வது ஒரு விசப் பரீட்சையாகும். மண்முட்டியில் சேர்ப்பது ஒருவித ருசியை அளிப்பதாகவும் பனம் பட்டையில் சேர்ப்பது வேறுருசியாகவும் இருக்கின்றது. மண்முட்டிகள் உடைய நேரலாம். ஓலைப் பட்டை வேலை செய்வதும் விலையும் அதிகம். உடையாது ஆனால் பொலித்தீன்பைகளோ சில வேளைகளில் ஒட்டுக்கள் பிரிந்து இருக்கும். அல்லது காகம், அணில், வவ்வால்கள் போன்றவற்றால் சேதப்படுத்தப்படும் எனவே இம்முறையினைத் தவிர்ப்பது மிகவும் நல்லது அத்தோடு முக்கியமாக பனைகளை தறிப்பது தவிர்க்கப்பட வேண்டும். அதிலும் பெண்பனைகளைத் தறிப்பது முக்கியமாகத் தவிர்க்கப்பட வேண்டும். அப்படி பனை தறிப்பதற்கான அனுமதி வழங்குமிடத்தில் ஆண் பனைகளுக்கு அனுமதி கொடுப்பது ஓரளவு தாக்கத்தைக் குறைக்கலாம் எனவும் தெளிவுபடுத்து நன்று.

அடுத்து அக்கிராமத்திற்கு அண்மையில் தள்ளி உள்ள கொற்றாவத்தை பனங்கட்டி சீனித் தொழிற்சாலைக்குச் சென்று அதன் முகாமையாளர் திரு. சி. பூபாலன் அவர்களைச் சந்தித்தோம்.

அங்கே பெருமளவில் சீவல் தொழிலாளர்கள் வருவதும் பதநீரை (கருப்பநீரை) அளந்து ஊற்றுவதும், போவதுமாகவும் இருந்தார்கள். ஒரு பகுதியில் பதநீர் காய்ச்சிய நிலையில் கொதித்த வண்ணம் இருந்தது மறுபுறம் சீனி செய்யும் யந்திரத்தில் பாணி சீனி உருவில் மாற்றப்பட்டுக் கொண்டிருந்தது. வேறொருபுறம் பதப்படுத்தப்பட்ட பாணி அச்சில் வார்த்து கட்டி கட்டிகளாக வெல்லம் உருவாக்கிக் கொண்டிருந்தது.

இதற்கு மத்தியில் பேட்டியினை திரு. சி. பூபாலனுடன் ஆரம்பித்தோம்.

''இன்று சீவல் தொழிலாளர்கள் பெருகி உள்ளார்கள். அதிலும் பதநீர் (கருப்பநீர்) இறக்கும் தொழிலாளர்களே அதிகரித்துள்ளார்கள். அதற்குக் காரணம் சந்தைப்படுத்தல் முறையும், பனை தென்னை வள அபிவிருத்தி ஒன்றியத்தின் நியாயமான ஊதிய ஊக்குவிப்புத்தான். என்றார்

ஒரு தொழிலாளி நூற்றிஇருபத்தைந்து போத்தலுக்கும் அதிகமான பதநீரை தந்து வருகிறார். தினம் (2500) இரண்டாயிரத்து ஐந்நூறு போத்தலுக்கும் மேலாக கொள்முதல் செய்து வருகிறோம். நாம் சீனி, வெல்லம் போன்றவைகளை உற்பத்தி அதிகரிக்க புதிய கட்டிடங்களையும் போட்டுக்கொண்டிருக்கின்றோம். இது தமிழீழத்தை பொறுத்த வரையில் சந்தோஷப்படும் விடயம் தான் ஆனால் எமது உற்பத்திப் பொருட்களான வெல்லம், சீனி. போன்றவை பெரும் சிரமத்திற்கு மத்தியில் உற்பத்தி செய்தும் சந்தைப்படுத்த முடியாத தேக்க நிலையில் உள்ளது என்பதை அறியும்போது மிகவும் வேதனைப் படவேண்டியுள்ளது

''இதை ஓரளவேனும் சந்தைப்படுத்த வேண்டுமானால் தென்னிலங்கையில் இருந்து வரும் சீனி, சர்க்கரை போன்றவற்றினையோ அல்லது விலையினையோ கட்டுப்படுத்துவதோடு கட்டாயத்தையும் ஏற்படுத்த வேண்டும்' கூறிய அவர், பனைவெல்லத்தை புதுவருடம் கோவில் போன்ற வைபவங்களுக்கு சர்க்கரைக்குப் பதிலாகப் பயன்படுத்தலாம் என்றும் வெயில் காலங்களில் தேசிக்காய்த் தண்ணீருடன் சர்க்கரை, சீனிக்குப் பதிலாக பனம் சீனி, பனைவெல்லம் பயன்படுத்தலாம் என்றும் ஆலோசனை தெரிவித்து தமது பேட்டியினை முடித்து வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளையோர் அரங்கு

## விண்ணப்பப் படிவம்

இளைய தலைமுறையினரே "காப்பரண்" முத்திங்கள் மலர் உங்களின் முன்னேற்றத் திற்காகவும் உங்கள் திறன்களையும், எழுத்து ஆற்றல்களையும் வளர்த்து பயன்பெறச் செய்ய வேண்டும் என்ற நோக்குடனேயே "இளையோர் அரங்கு" என்னும் பகுதி யினை ஒதுக்கித் தந்துள்ளது.

இப்பகுதியில் கவிதை, கட்டுரை, சிறு கதை, போன்ற இன்றைய இளையோருக்கான ஆக்கங்களை எழுதி அனுப்புங்கள்.

ஒவ்வொரு ஆக்கத்துடனும் கீழே பிரசுரிக் கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தை இணைத்து ஒவ்வொரு மாதமும் 10ஆம் திகதிக்கு முன்னர் அஞ்சல் கூட்டின் மேல் இடதுபக்க மூலையில் 'இளையோர் அரங்கு' எனக் குறிப்பிட்டு காப்பரண், 25, பொன் னப்பா வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப் பாணம். என்னும் முகவரிக்கு அனுப்பி வைக் கவும்.

---

**இளையோர் அரங்கு**

மாணவர் பெயர்: ..........................................................

வகுப்பு: ..........................................................

ஆக்கம்: ..........................................................

பாடசாலை ..........................................................

.......................................... ..........................................

மாணவர் ஒப்பம் அதிபர் ஒப்பம்

---

# இளையோர் அரங்கு

## புதிர்க் கணக்கு

ஒரு வியாபாரிக்கு நான்கு மக்கள் இருந்தனர். அந்த நால்வரின் வயதைக்கூட்டினால் 45 கிடைக்கும். யாராவது வியாபாரியைப் உன் புதல்வர்களின் வயது என்ன?" என்று கேட்டால் அவன் கொஞ்சம் வேடிக்கையாக பதில் கூறுவான்' எனது மூத்த மகனுடைய வயதை இரண்டால் வகுத்தால் அவனுக்கு அடுத்தவனுடைய வயதிலிருந்து இரண்டைக் கழித்தாலும் மூன்றாம் மகனுடைய வயதுடன் இரண்டைக் கூட்டினாலும் நான்காவது கடைசிப் பையனுடைய வயதை இரண்டால் பெருக்கினாலும் ஒரே எண் கிடைக்கும்" என்பான். அப்படியானால் ஒவ்வொருவருடைய வயதும் என்ன? யோசித்துக் கண்டு பிடிக்கிறீர்களா?

(விடை அடுத்த பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளையோர் அரங்கு

### காப்பரண் முகப்புச் சித்திரப் போட்டி

காப்பரண் அட்டைக்குரிய சித்திரத்திற்காக பாடசாலை மட்டத்திலான மாணவர், மாணவியர் அனைவரும் இப் போட்டியில் பங்குபற்றலாம். பரிசுபெறும் அதிசிறந்த சித்திரங்கள் மூன்றிற்கு பரிசுகள் உண்டு.

முதலாவது பரிசு ரூ. 1000/-
இரண்டாவது பரிசு ரூ. 800/-
மூன்றாவது பரிசு ரூ. 600/-

இச்சித்திரப் போட்டியில் பங்கு பெறுவோர் எவ்வித வண்ணங்களையும் பயன்படுத்தலாம். எம்மண்ணிற்கும் எம்மக்களுக்கும் காப்பர(ண்)ணாக விளங்கும் பனை தென்னை வளம் பற்றிய உயிரோட்டமான சிந்தனையையும் உணர்வுகளையும் வெளிப்படுத்தக் கூடியவிதத்தில் சித்திரங்கள் அமைதல் வேண்டும்.

ஒருவர் எத்தனை சித்திரங்களும் அனுப்பலாம். அதற்கான அளவுகள் அகலம் 20'' 14'' நீளம் கொண்ட ஒருதாளின் ஒரு பக்கத்தில் மட்டும் சித்திரங்கள் வரையப்பட வேண்டும்.

மேற்படி சித்திரங்கள் யாவும் 30-06-1992க்கு முன்

''காப்பரண்''
பனை தென்னை அபிவிருத்தி ஒன்றியம்
இல, 25, பொன்னப்பா வீதி,
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

''இளையோர் அரங்கு'' விண்ணப்பப் படிவத்தினையும் பூர்த்தி செய்து அவற்றுடன் இணைத்து அனுப்புதல் அவசியம். □□

## இளையோர் அரங்கு

### புதிர்க் கணக்கு விடை

மூத்தவன் வயது 20 அதை இரண்டால் வகுத்தால் கிடைப்பது 10 அடுத்தவன் வயது 12 அதிலிருந்து இரண்டைக் கழித்தால் கிடைப்பது 10 மூன்றாவது மகனுடைய வயதுடன் இரண்டைக் கூட்ட வேண்டும் கூட்டினால் 10 வரவேண்டும் ஆகவே அவன் வயது 8 நான்காவது கடைசி மகனின் வயதை இரண்டால் பெருக்கினால் 10 கிடைக்க வேண்டும். எனவே அவன் வயது 5 ஆகவே மொத்தம் 20 : 12 : 8 : 5 = 45

## இளையோர் அரங்கு

### துணுக்கு

சிங்கத்தின் வாலிலும் நகம்

சிங்கத்தின் வாலிலே குஞ்சம் போன்ற மயிர்க்கற்றையை விலக்கிப்பார்த்தால் முனையிலே கொழுக்கி போன்று ஆணிபோன்றும் மிகக்கடினமான கூரியநகம் இருப்பதைக் காணலாம். □□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நமது பாரம்பரிய வளத்திலிருந்து...

- ☐ சுவைமிகு உணவு வகைகள்
- ☐ மென்பான வகைகள்
- ☐ இனிப்பு சிற்றுண்டி வகைகள்
- ☐ கால்நடைகளின் உணவுகள்
- ☐ வீட்டுப் பாவனைப் பொருட்கள்
- ☐ அலங்காரப் பொருட்கள்
- ☐ பனந்தும்பு தூரிகைகள்

ஆகிய உற்பத்திகளை

பனை அபிவிருத்திச் சபையின்

**கற்பகம்**

விற்பனை நிலையங்களில்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

# பனை அபிவிருத்திச் சபை

## யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பரண் வாசகர்களே!

எமது பொருளாதாரத்தையும் உள்ளூர் உற்பத்தியையும் மேம்படுத்தல் தொடர்பான உங்களின்

ஆக்கங்கள்,
செய்முறை விளக்கங்கள்,
கருத்துக்கள்,
புதிய கண்டுபிடிப்புக்களின் அறிமுகம்,
எம் தமிழீழ தேசிய வளங்கள்,
ஏனைய விடயங்கள்
போன்றவற்றை

உடனே அனுப்பி வையுங்கள்
பிரசுரமாகின்றவைக்கு பரிசுகள் உண்டு

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

## ○ பனை தென்னை வள அபிவிருத்தி ஒன்றியம்

25, பொன்னப்பா வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்,

---

உள்ளூர் உற்பத்திக்கு ஊக்கமளிப்போம்!
எமது வளங்களை நாமே பயன்படுத்துவோம்!!

தரமான
சுவையான

## பனைவள உணவுகள்

- ○ பனம் சீனி
- ○ பனம் பாணி
- ○ பனை வெல்லம்
- ○ கல்லாக்காரம்
- ○ பனம் ஜாம்
- ○ ஒடியல்
- ○ புழுக்கொடியல்
- ○ மென்பானங்கள்

இவற்றைப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

**வடமாகாண தெ. ப. பொ. கூ. சங்கங்களின்**
**மத்திய சந்தைப்படுத்தற் பிரிவு**
**220, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org